குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

மலர் 48 | சுக்கில ஆண்டு ஆவணித் திங்கள் 1[illegible]-9-89 | இதழ் 10

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான வைத்தீசுவரன் கோயில்
ஸ்ரீ வைத்தியநாத சுவாமி தேவஸ்தானத்திற்கு
வழிபாடு ஆற்றிப் பிரார்த்தனை நிறைவேற்றும் பொருட்டு விஜயம் செய்த

இந்தியக் குடியரசுத் தலைவர், திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கட்குத்
தருமை ஆதீனச் சார்பில் ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகளும்
வழக்குரைஞர் திரு. C. R. குஞ்சிதபாதம் அவர்களும்,
மூர்த்தி, தலம், தீர்த்தம் பற்றி விளக்கம் கூறி மகிழ்விக்கும் காட்சி. 6 — 9 — 89

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 48 | 10–9–89 | இதழ் 10

உட்பொருள்

எண்		பக்கம்
1	தேச நலத்திற்குத் தேவி வழிபாடு ...	505
2	தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை ...	510
3	ஆறுகளை நாட்டுடைமையாக்குக	515
4	ஸ்ரீ சொக்கநாதர் திருமண மண்டபம் ...	517
5	மேலை நாட்டுத் தத்துவ மேதைகள் ...	521
6	கடிதம் ...	525
7	யார் பெரியர்? ...	526
8	போதமும் சித்தியும் ...	531
9	மணிக்கடலில் முகந்த சில முத்துக்கள் ...	534
10	ஸ்ரீ திரிபுராந்தக மூர்த்தி ...	537
11	கவிக்கம்பர் ...	539
12	தீர்த்தாண்டதானபுரக் கல்வெட்டு அஞ்சுவண்ணத் தொடர் நினைவு ...	543
13	செய்திகள் ...	546
14	எதிர்காலம் ...	549
15	இதழ்வழிச் சைவசமயக் கல்வி V. பாடம்-8. ...	553

உ
குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

பிறவி யெனுங்கடல் நீந்திக்
கரையிற் பெரும்பயனை
நிறைவுகொண் டாயடி யேனையும்
நீக்கினை நின்வருளால்
உறைகின் றனனெனை வாவென்
றழைக்கு முபாயமதை
அறைவை நீயெற்கு ஞானப்ர
காச வருள்மணியே.

— நவரத்தினமாலை 2

ஆசிரியர் :-
வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்

துணையாசிரியர் :-
மகாவித்துவான்
சி. அருணைவடிவேல் முதலியார்

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 48 ★ இதழ் 10

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

சுக்கில – ஆவணி 10—9—1989

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடல்ஆல வாயிலாய்!
நின்தயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்.

தேச நலத்திற்குத் தேவி வழிபாடு

தமிழ்கத்தில் சக்தி வழிபாடு :

எல்லாம் வல்ல சிவபரம்பொருளின் திருவருளை - சக்தி என வழங்குதல் சைவ மரபு. 'அருளது சக்தியாகும் அரன் தனக்கு' என்பர் அருணந்தி சிவாசாரியர். சக்தியை சிவத்தின் ஒரு கூறாகவே கொண்டு நம் முன்னோர் போற்றி வழிபட்டனர். இதனைச் சிலப்பதிகாரத்தில் வரும் வேட்டுவவரி உறுதிசெய்கிறது. சக்தியை உமையவள் எனக் கொண்டு போற்றும் மரபு சங்க காலத்திலேயே தொடங்கிவிட்டது. இவ்வம்மையின் ஆடல்களைச் சங்க இலக்கியக் கடவுள் வாழ்த்து ஒன்று விரிக்கிறது. அவள் ஆற்றல்களை-பல்வேறு திருநாமங்களைச் சிலப்பதிகார வழக்குரை காதை எடுத்து இயம்புகின்றது. 'வெற்றிவேல் தடக்கை கொற்றவை', 'அறுவர்க்கு

இளைய நங்கை', 'இறைவனை ஆடல்கண்டு அருளிய அணங்கு', 'சூருடைக் கானகம் உகந்த நாள்', 'தாருகன் பேர் உரம் கிழித்த பெண்' என வரும் சிலப்பதிகாரத் தொடர்கள் நினைவுகூர்த்தக்கன. வடபாரதப் பகுதிகளுள் சக்தி வழிபாடு தனியே பிரித்து சாக்தம் எனப் போற்றப் பெற்றது. என்றாலும், தென்னாட்டில் சிறப்பாகத் தமிழகத்தில் சிவ வழிபாட்டின் ஒரு அங்கமாகவே சக்தி வழிபாடு நிலவி வந்துள்ளது.

நவராத்திரி நாயகி :

முழு முதற் பொருளான சிவபெருமான் தான் ஒருவனே தனித்துநின்று படைத்தல், காத்தல், அழித்தல் ஆகியமுத்தொழில்களையும் நிகழ்த்தி அருளுவன். அந்நிலையில் சிவனைமுறையே பிரமன், திருமால், உருத்திரன் என்பர். அதுபோல, உமையவள் ஒருத்தியே, வெற்றிவிளக்கும் நிலையில் கொற்றவை என்றும், கலைஞானங்களை வழங்கும் நிலையில் கலைமகள் என்றும் அழைக்கப் பெற்றாள். இவ்வுண்மையை அபிராமி பட்டர்,

> ' தனம்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வு அறியா
> மனம்தரும் ... ... '

எனத் தம் அபிராமி அந்தாதியில் அழகுற உறுதிசெய்கிறார். உமையம்மைக்கு இந்திய நாட்டின் பல பகுதியிலும் எடுக்கப்படும் பெருவிழாக்களுள் ஒன்று நவராத்திரி. இவ்விழா மேற்குவங்கத்தில் 'துர்க்கா பூஜா' என்றும், கர்நாடகத்தில் 'தசரா' என்றும், இன்றும் பெருஞ்சிறப்போடு கொண்டாடப்பட்டு வருகிறது. தமிழகத்தில் சிவாலயங்களில் எழுந்தருளி அருள் வழங்கும் உமையவளுக்கு நவராத்திரி நாள்களில் சிறப்பு வழிபாடுகள் நிகழ்த்தப் பெறுகின்றன. நவராத்திரியின் ஒன்பதாம் நாள் சரஸ்வதி பூஜை என்றும், பத்தாம் நாள் விஜயதசமி என்றும் சிறப்பாகக் கொண்டாடப் பெற்று வருகின்றன.

ஆண்டுக்கு இரண்டு நவராத்திரி :

இந்நவராத்திரி விழா ஆண்டுக்கு இருமுறை கொண்டாடப் பெற்று வருகிறது. வேனிற்காலமாகிய வசந்தருது மற்றும் கார் காலமாகிய சரத்ருது என்பன இயமனின் இரண்டுகோரைப்பற்கள் போன்றவை. இக்காலங்களில் அம்மை முதலிய கொடு நோய்களும், காலரா முதலிய கொள்ளை நோய்களும் மனித இனத்தைப் பேரழிவு செய்யும். இவற்றிலிருந்து விடுபட உமையம்மையை

பூசித்துவழிபடும் வழிபாடே நவராத்திரிவழிபாடாகும். சித்திரைத் திங்கள் வளர்பிறை பிரதமை முதல் ஒன்பது நாள்கள் கொண்டாடப் பெறுவது வசந்த நவராத்திரி எனப்படும். புரட்டாசித் திங்கள் வளர்பிறை பிரதமை முதல் ஒன்பது நாள்கள் கொண்டாடப் பெறுவது சாரதா நவராத்திரி எனப்படும். இவையன்றி மங்களவாரம் (திங்கட்கிழமை), சுக்கிரவாரம் (வெள்ளிக்கிழமை), சப்தமி (வளர்பிறை - தேய்பிறை ஏழாம் நாள்கள்), அஷ்டமி (எட்டாம் நாள்கள்), நவமி (ஒன்பதாம் நாள்கள்), கிருஷ்ண பக்ஷ சதுர்த்தி (தேய்பிறை நாலாம் நாள்), பிரதோஷம் முதலியன அம்மை வழிபாட்டுக்குரிய சிறந்த நாள்களாகக் கருதி வழிபடத் தக்கன.

நவராத்திரி பூஜை முறை :

நவராத்திரி விரதம் மேற்கொள்வது இம்மை, மறுமைப் பயன்களை நல்கும். அமாவாசை அன்று ஒருவேளை உணவு கொண்டு, அடுத்த ஒன்பது நாள்களும் பால், பழம் மட்டும் உட்கொண்டு மூன்று வேளைகளிலும் அம்மையை வழிபடுதல் வேண்டும். உமையம்மையைக் கும்பத்திலோ (குடம்) அல்லது, பிம்பத்திலோ (உருவம்) மந்திரம், பாவனை முதலியவற்றால் முறைப்படி எழுந்தருள்வித்து, இவ்விரதத்தை இயன்றவரை நியமமாய் மேற்கொள்வேன் என உறுதிமொழி கூறி, நவராத்திரி பூஜைகளைத் தொடங்கவேண்டும். முதல் மூன்றுநாள்கள் கொற்றவையாகவும், நடு மூன்று நாள்கள் இலக்குமியாகவும், கடைசி மூன்று நாள்கள் கலைமகளாகவும் அம்மையைப் பாவித்துப் பூஜிக்க வேண்டும். அம்மைக்கு விருப்பமான மலர்களால் அர்ச்சிக்கலாம். சிறப்பாகச் செஞ்சந்தனம் தோய்ந்த வில்வத் தளிர்களால் பூஜிப்பது பெரும் பயன்தரும் பாயசம் நைவேத்தியம் சிறப்பானது. செல்வம் படைத்தவர்கள் சதசண்டி ஹோமம் செய்து வழிபடுவது பெரிதும் சிறப்பாகும்.

வழிபட்டுப் பேறு பெற்றோர் :

நவராத்திரி ஒன்பது நாள்களும் விரதங்காத்துக் கொண்டாட இயலாதவர்கள், கடைசி மூன்று நாள்களிலாவது விரதங்காத்து அம்மையைவழிபடவேண்டும். அஸ்தநட்சத்திரத்தன்றுஆவாகனம் செய்து உத்திராடம் முடிய மும்மூன்று நாள்களாக அம்மையை முறையே, கொற்றவை, இலக்குமி, சரஸ்வதியாகப் பாவித்து வழிபடல் நலம் பயக்கும். ஒன்பதாம் நாள் எல்லா ஆயுதங்களையும் கொலுவில் வைத்துப் பூசை செய்வர். அன்று ஆயுத பூஜை என

வழங்கப்பெறும். உமையவள் அண்டங்கள் அனைத்தையும் படைப் பவள் என்ற உண்மையை உணர்த்தவே பொம்மைகளாலான கொலுவைத்துப் போற்றுகின்றோம். தொடக்கநாளாகிய பிரதமை அன்று அஸ்த நட்சத்திரம் சேர்ந்திருந்தால் அது பெரிதும் சிறப் பாகக் கருதப் பெறும். (இவ்வாண்டு இவ்வாறு அமைந்துள்ளது) மகாபாரதத்தில், காளிகோயில் திருமுன்னர். ஒரு வன்னி மரப் பொந்தில் தங்களது ஆயுதங்களை மறைத்து வைத்து விட்டுச் சரந்துறை வாழ்வு மேற்கொண்ட பாண்டவர்கள் – மீண்டும் அவற்றை எடுத்துச் சென்று வெற்றிகண்டநாள் நவராத்திரியின் பத்தாம்நாள். விஜயன் வெற்றி வேண்டிப்பூசித்தநாள் விஜயதசமி என்று வழங்குகின்றது. கோயில்களில் அம்மை வன்னி மரத்து அடியில் எழுந்தருளி அம்புபோடும் ஐதிகம் இன்றும் உள்ளது. தமிழ்நாட்டில் விஜயதசமி கல்விப்பயிற்சி தொடங்குவதற்குரிய சிறந்த நாளாகக் கருதப்படுகின்றது.

விரதம் மேற்கொள்ளும் முறை :

நவராத்திரி நாள்களில் நாள்தோறும் காலையில் நீராடி, நித்தியகடன் முடித்து அம்மை பூஜை தொடங்க வேண்டும். ஒவ்வொரு நாளும் கன்னிப் பெண்களை (இரண்டு முதல் பத்து வயதுவரை) குமாரி, திரிமூர்த்தி, கல்யாணி, உரோகிணி, காளிகா, சண்டிகா, சாம்பவி, துர்க்கா, சுபத்திரா என்னும் தேவிகளின் அம்சங்களாகக் கருதிப் பூசித்து, உணவு, உடை, அணிகலன்கள் முதலியனவற்றை இயன்றவரை வழங்க வேண்டும். பத்தாம் நாள் விரதம் நிறைவித்து உணவு கொள்ள வேண்டும். ஆண் பெண் இருபாலரும் இவ்விரதம்மேற்கொள்ளலாம். இராமபிரான் சீதாபிராட்டியை மீட்க இவ்விரதம் மேற்கொண்டதாக நூல்கள் உரைக்கின்றன. இவ்விரத காலங்களில் லலிதா சகஸ்ரநாமம், சவுந்தரியலகரி, சகலகலாவல்லி மாலை, அபிராமி அந்தாதி, மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் முதலாய அம்மைக்குகந்த நூல் களைப் பாராயணம் செய்வது பெரும் பயன் நல்கும்.

தருமையில் சதசண்டி வேள்வி :

திருக்கயிலாய பரம்பரை, தருமபுர ஆதீனத்தில் அருள்மிகு தருமபுரீசுவரர் திருக்கோயில் திருச்சுற்றில் எழுந்தருளியிருந்து அருள்மழை பொழியும். பதினெண் திருக்கரங்களோடு கூடிய ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவிக்கு வழக்கம் போல் இவ்வாண்டும்,

தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

திருவுளப்பாங்கின்வண்ணம் 39 ஆவது சதசண்டி வேள்வி 30—9—1989 சனிக்கிழமை தொடங்கி 10—10—1989 செவ்வாய்க் கிழமை முடிய பதினொருநாள்கள் மிகச் சிறப்பாக நடைபெற வுள்ளது. விழா நாள்களில் காலை, மாலை சதசண்டி வேள்வி, சுவாசினி குமாரி, வடுபூஜை, நான்மறை பாராயணம், துர்க்கா சூக்தபாராயணம், திருமுறைப் பாராயணம், அபிராமி அந்தாதி பாராயணம், அம்மைக்கு லட்சார்ச்சனை, மேருவிற்கு சகஸ்ரநாம அர்ச்சனை, தேவிபாகவத விரிவுரை முதலியன மிகச் சிறப்பாக நடைபெறவுள்ளன. 9—10—1989 திங்கட்கிழமை காலை சப்தசதி ஹோமம், மகாபூர்ணாகுதி, சதசண்டிவேள்வி நிறைவு முதலியன நிகழும். 10—10—1989 செவ்வாய்க்கிழமை காலை ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காம்பிகைக்கு யாக கலசாபிஷேகம் நிகழும்.

தேச நலத்திற்குத் தேவி வழிபாடு :

தேசநலத்திற்காகப் பெரும்பொருட்செலவில் தருமையில் நிகழ்த்தப்படும் இத் தேவிவழிபாடு வேறெங்கும் காண இயலாத சிறப்புடையது. சைவப் பேரன்பர்கள் நவராத்திரி விரதம் மேற் கொண்டு, அம்மையை வழிபட்டு இம்மை மறுமை இன்பம்பெற்று உய்வார்களாக. வாய்ப்புள்ளவர்கள் தருமைக்கு வந்து ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவிக்கு நடைபெறும் சதசண்டி வேள்வியில் பங்கேற்று, வழிபட்டு அம்மை அருள் பெற ஞானசம்பந்தம் அன்புடன் அழைக்கிறது.

அன்புடனே வருக ! அன்னை அருள் பெறுக !

சக்தியின் வடிவு ஞானமே

சத்திதன் வடிவே தென்னில் தடையிலா ஞான மாகும்
உய்த்திடும் இச்சை செய்தி இவைஞானத் துளவோ என்னில்
எத்திறம் ஞான முள்ள(து) அத்திறம் இச்சை செய்தி
வைத்தலான் மறைப்பில் ஞானல் மருவிடும் கிரியை எல்லாம்.

ஐந்து சக்திகள்

ஒன்றதாய் இச்சா ஞானக் கிரியையென் றொருமூன் றாகி
நின்றிடும் சத்தி இச்சை உயிர்க்கருள் நேச மாகும்
நன்றெலாம் ஞான சத்தி யால்நயந் தறிவன் நாதன்
அன்றருட் கிரியை தன்னால் ஆக்குவன் அகில மெலாம்.

— சிவஞானசித்தியார் சுபக்கம்

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வைத்தீஸ்வரன்கோயில்
அரசினர் மேல்நிலைப்பள்ளி இலக்கிய மன்றத்தைத்
தொடங்கிவைத்து வழங்கியருளிய

ஆசியுரை

22—8—89

திருச்சிற்றம்பலம்

உள்ளம் உள்கி உகந்து சிவனென்று
மெள்ள வுள்க வினைகெடும் மெய்ம்மையே
புள்ளி னார்பணி புள்ளிருக்கு வேளூர்
வள்ளல் பாதம் வணங்கித் தொழுமினே.

திருச்சிற்றம்பலம்

— திருநாவுக்கரசு சுவாமிகள்.

இலக்கியமன்றங்கள் ஏன் :

இன்று, வைத்தீஸ்வரன் கோயில் அரசினர் மேல்நிலைப் பள்ளி மாணவ - மாணவியர்களாகிய நீங்கள் உங்கள் பள்ளியின் இலக்கிய மன்றத் தொடக்க விழாவைச் சிறப்பாகச் கொண்டாடுகிறீர்கள். பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் ஆண்டுதோறும் இலக்கிய மன்றம் அமைத்து விழாக் காண்பது எதற்காக? இலக்கிய மன்றங்கள் மாணக்கர்களுக்குப் பேச்சுப் பயிற்சி அளிக்கும் நோக்கிலேயே அமைக்கப்படுகின்றன. தான் அறிந்ததைப் பிறர் உளம் கொள்ளுமாறு எடுத்து உரைக்கும் ஆற்றலை இலக்கிய மன்றங்கள் வளர்க்க வேண்டும். 'வார்த்தை பதினாயிரத்து ஒருவர்' என்பது பேச்சாற்றல் ஓர் அரிய கலை என்பதை உணர்த்த வந்த பழந்தொடர். கற்றவற்றைப் பிறர் உணருமாறு எடுத்துரைக்கும் வல்லமை இல்லாரை, மலர்ந்தும் மணம்தாராத மலருக்கு உவமை கூறுவர் திருவள்ளுவர்.

" இணரூழ்த்தும் நாறு மலரனையர் கற்றது
உணர விரித்துரையா தார் "

என்பது இக்கருத்தை விளக்க வந்த திருக்குறள். மொழி, கணிதம், அறிவியல், வரலாறு, நிலவியல் என்று பலவற்றை நீங்கள் பயில் கின்றீர்கள். பயிலுங்கால் உருவாகும் எண்ணங்களுக்குப் பேச்சு வடிவந்தரும் வண்ணக்கலையை வளர்ப்பதே இலக்கியமன்றங்களின் நோக்கமாகும்.

பேச்சு, கலையாதல் :

இளமையில் கற்கும் எழுத்து மற்றும் பேச்சுப்பயிற்சிகள் வளர வளரக் கற்பனைவளத்தோடு உருவாகும்போது உயர்ந்தகலைகளாக மலர்கின்றன. ஒரு கருத்துக் கற்பனை கலந்து வெளிப்படுத்தப்படும் போது கலைவடிவம் பெறுகிறது. எழுத்தாளர் கல்கி. கிருஷ்ண மூர்த்தி தஞ்சைமாவட்டம் மணல்மேட்டைச் சேர்ந்தவர். தம் இளமைக்கால நினைவுகளைப் பிற்காலத்தில் அவர் எழுதினர். 'இளமையில் எங்கள் ஊரில் நடைபெறும் மகாபாரத, இராமாயணச் சொற்பொழிவுகளைக் கேட்க நான்தோறும் செல்வேன். அங்கே தினமும் ஒரு நங்கையும் வருவாள். நான் அவளை நேசித்தேன். அவளும் என்னை நேசித்தாள். எங்கள் காதல் நாளும் நாளும் வளர்ந்து சிறந்தது. அந்த நங்கை யார் என்கிறீர்களா? அவள் தான் நித்திராதேவி. மகாபாரத, இராமாயணக் கதை கேட்கச் சென்ற இடத்தில் தாம் தூங்கியதைக் கல்கி இவ்வாறு நயம்பட உரைக்கும் போது பேச்சு ஒரு கலையாக உருக்கொள்கிறது.

ஊரை, உலகைத் தெரிந்துகொள் :

பள்ளிக்கூடத்தில் நீங்கள் பாடதிட்டத்தில் உள்ளவற்றை மட்டும் படித்தால் போதாது, ஒவ்வொருவரும், தம் ஊர், தம் நாடு, தமது மொழி, தம் சமயம், தம் இனப்பண்பாடு மற்றும் நாகரிகம் இவற்றையும் அறிந்து வைத்துக் கொள்ள வேண்டும். எடுத்துக் காட்டாக நீங்கள் படிக்கும் இந்த ஊர்ப் பெயர் புள்ளிருக்கு வேளூர் என்பது. இப்பெயர் அமைந்த காரணத்தை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும். புள் - பறவை இங்கே ஜடாயு, சம்பாதி என்பன. இருக்கு - என்பது நால்வேதங்களுள் ஒன்று. வேள் - கந்த வேளாகிய முருகன். ஊர் - வான மண்டலத் தில் ஊர்ந்து செல்லும்சூரியன். இந்நால்வரும் இங்கே எழுந்தருளி யுள்ள அருள்மிகு தையல்நாயகி அம்மை உடனுறை அருள்மிகு வைத்தியநாத சுவாமியை வழிபட்டுப் பேறு பெற்றனர். அதனுல்

இவ்வூர் புள்ளிருக்கு வேளூர் எனப் பெயர் பெற்றது என மற்றவர்களுக்கு நீங்கள் எடுத்துரைக்க வேண்டும். சடாயு சம்பாதி இங்கே பூசை இயற்றினர். இதற்கு ஆதாரம் என்ன என்று கேட்டால்,

" கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தம் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானார் உறையுமிடம்
தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே "

என்ற ஞானசம்பந்தர் பாடலையும்,

" யோசனை போய்ப் பூக்கொணர்ந்தங்கு ஒருநாளும் ஒழியாமே
பூசனைசெய்து இனிதிருந்தான் புள்ளிருக்கு வேளூரே "

என்ற பாடற் பகுதியையும், வேதம் வழிபட்டது என்பதற்கு,

" வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்
போதத்தால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளூரே "

என்ற பாடற் பகுதியையும் நீங்கள் எடுத்துக்காட்ட அறிந்திருக்க வேண்டும் நாள்தோறும் ஸ்ரீ முத்தையா சந்நிதியில் ஸ்ரீ முத்தையா செய்யும் பாவனையில் முத்துலிங்க பூஜை நடைபெறுவது முத்தையா ஸ்ரீ வயித்தியநாதரைப் பூசிக்கும் ஐதிகத்தைக் காட்டுகிறது.

தெக்ஷிணயனத்தில் புரட்டாசி மாதம் மூன்று நாளும், உத்தராயணத்தில் மாசி மாதத்தில் மூன்று நாளும் மாலை நேரத்தில் சூரிய ஒளிக்கதிர் ஸ்ரீ வயித்தியநாதர் மீது படுவதே சூரிய பூசை ஐதிகத்தைக் காட்டுகிறது. இவற்றையெல்லாம் நீங்கள் தெரிந்து பிறருக்கும் அறிவித்தல் உங்கட்கும் நாட்டிற்கும் நலம் பயக்கும் செயலாகும்.

ஒவ்வொரு ஊரிலும் பயிலும் மாணாக்கர் தத்தம் ஊர் வரலாற்றை அறியுமாறு பயிற்றுவிக்கும் கடமை ஆசிரியர்களுக்கு உரியதாகும்.

எது இலக்கியம்?

இன்று இலக்கியமன்றம் தொடங்குகின்றீர்கள். இலக்கியம் என்றால் என்ன? எதனை இலக்கியம் என்று கூறலாம் என்பதை நீங்கள் சிந்திக்கவேண்டும். இலக்கியம் என்றால் ஏதோ ஒரு நூல் என்று கருதுகின்றோம் அது பிழையான கருத்து. நாம் வாழும் வாழ்க்கையே இலக்கியம். இன்றைய செய்தி - நாளைய வரலாறு என்று கூறுவர். நமது முன்னோர் வாழ்ந்த வாழ்க்கையைக் கலை வளர்ச்சியுடன் தொகுத்துக் கவிதைவடிவிலோ, உரைநடையிலோ

வழங்கினால் அவை இலக்கியங்களாகின்றன. முன்னோர் வாழ்க்கையில் - அனுபவத்தில் கண்டு உரைத்த உண்மைகள் அறஇலக்கியங்களாகவும், நீதி இலக்கியங்களாகவும் திகழ்கின்றன. உயர்ந்தோர் வாழ்வை எடுத்துக்காட்டி - இவர் போல் வாழவேண்டும் என்றும், தாழ்ந்தோரை அடையாளம் காட்டி இவர்போல் வாழ்தல் கூடாது என்றும் உடன்பாட்டாலும், எதிர்மறையாலும் இலக்கியம் மக்களைநெறிப்படுத்துகின்றது. இலக்கியம்கண்டதற்கு இலக்கணம் இயம்பல் போல், வாழும் வாழ்வு இவ்வாறு அமைய வேண்டும் என்பதை, வாழ்ந்தோர் வாழ்வு காட்டி விளக்குவது இலக்கியம். இலக்கியம், பக்தி இலக்கியம், நீதி இலக்கியம், வரலாற்று இலக்கியம், இசை, கூத்து இலக்கியங்கள் எனப் பலவகைப்படும். இவற்றை எல்லாம் அறிந்து சிறந்த குடிமக்களாக நீங்கள் உயர இந்த இலக்கிய மன்றம் பயன்பட வேண்டும்.

அச்சமும், அன்பும் :

இலக்கியத்தில் இருந்து வாழ்வியல் நெறிகளைக் கற்பது போல் உலக நடப்புக்களிலிருந்தும் வாழ்வியலைக் கற்க நீங்கள் முயற்சிக்க வேண்டும். நீங்கள் திருக்கோயிலுக்குப் போகிறீர்கள். செல்வ முத்துக்குமாரப் பெருமான் கார்த்திகை அபிடேகத்திற்காக அபிடேக மண்டபத்திற்கு எழுந்தருளுகின்றார். அவர்க்குத் தந்தை வைத்தியநாதர். தாய் தையல்நாயகி. புறப்படும் போதும், திரும்பும்போதும் சுவாமி அம்பாள் சந்நிதியில் நின்று அவர் உத்தரவு பெற்றுச்செல்வதும், திரும்புவும் இருப்பிடம் சேரும் போதும் தாய் தந்தை சந்நிதியில் நின்று தெரிவித்துச் செல்வதும் இன்றும் ஐதிகக் காட்சிகளாக இங்கே திகழ்கின்றன. இவற்றிலிருந்து நீங்கள் தாய் தந்தையரிடம் நடந்து கொள்ளும் முறையைப் பாடம் கற்க வேண்டும். அச்சமும் - அன்பும் கொண்டு உரியவாறு பெரியோர்களிடம் பழகவேண்டும். தந்தையிடம் அச்சம்; தாயிடம் அன்பு நாம் கொள்ளுகின்றோம். தந்தையிடம் அச்சம் கலந்த அன்பும் தாயிடம் அன்புடன் கூடிய அச்சமும் கொண்டு வாழக் கற்க வேண்டும். இப்பண்புகள் உங்களை உயரச் செய்யும்.

உழைத்து வாழ வேண்டும் :

நீங்கள்வாழ்க்கையில் கற்கவேண்டிய பாடங்கள் பலவுள்ளன. அவற்றுள் ஒன்று; 'உழைத்து வாழ் வு' என்ற உன்னதப் பண்பாகும். 'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ' என்றனர் முன்னோர். மனித உயர்ச்சியின் ரகசியமே உழைப்பில் தான் அமைந்துள்ளது. உழைக்க மறுப்பவரை உலகம் போற்றுதலுதக்கி

விடும் உலக அமைப்பிலும் இதனைக் காணலாம். எவ்வகையிலும் பயன் படாதவரை உலகினர் போற்ற மாட்டார்கள். பெற்றோர் குழந்தையை வளர்க்கிறார்களே! அது என்ன பயன் நோக்கி என்று வினவலாம்! குழந்தை தரும் மழலை இன்பம் பெற்றோர்களுக்கு மகிழ்வைத் தருகிறது. வளர வளரப் பெற்றோர் குழந்தையைச் சிறு சிறுபணிகளிலே ஈடுபடுத்துகின்றனர். பெரியவனாக வளர்ந்த பின் அவன் தானே உழைக்கிறான். உழைப்பைத் தெய்வமாகப் போற்றவேண்டும். செய்யும் தொழிலே தெய்வம் என்று கவிஞர் பாராட்டுகின்றார். நமக்காக, நம் நன்மைக்காக - உழைக்கத் தொடங்கினால் அதுவே, மக்களுக்காக, நாட்டுக்காக என மலர்கின்றது. உழைப்பால் வந்த ஊதியமே மகிழ்வைத்தரும். இந்த உண்மைகள் அறிந்து உழைத்துக் கற்றுப் பள்ளிக்கும், பெற்றோர்க்கும், நாட்டுக்கும் நீங்கள் நலம் பயக்க வேண்டும்.

சுற்றுப்புற நலம் பேணுக :

நன்மைகளைச் செய்வது மட்டும் போதாது! தீமைகள் செய்யாதிருக்கவும் நீங்கள் பழக வேண்டும். ஒரு மரம் வைத்து வளர்க்க வேண்டும். இயலாவிட்டால், ஒரு மரத்தை வெட்டாமலாவது போற்ற வேண்டும். நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்கு காடுகள் இருக்கவேண்டும் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர். இன்றோ ஆறில் ஒரு பங்கே காடுகள் உள்ளன. காடுகள் - மரம் - செடி - கொடிகள் தரும் நன்மைகள் ஏராளம். ஆலை முதலியவற்றில் எழும் பெரும் ஒலிகளை இவை கட்டுப்படுத்துகின்றன. ஆலைகள் கக்கும் நச்சுப்புகைகளை உணவாக்கிக் கொண்டு மனிதர் உயிர் வாழ்விற்குத் தேவையான பிராண வாயுவை அவை வழங்குகின்றன. ஒருமரத்தின் விறகு மதிப்பு 500 ரூபாய் என்றால் 50 ஆண்டுகளில் அது பிராண வாயு முதலியவற்றால் தரும் கொடை மதிப்பு 50 ஆயிரம் ரூபாயாகும். ஒரு மனிதனுக்கு ஆறு மரங்கள் வழங்கும் பிராண வாயு தேவை. அவற்றை வளர்த்து, மழை வளம் கண்டு உலகை வாழ வைக்க நீங்கள் முயலவேண்டும்.

வாழ்த்து :

நல்லொழுக்கம், நற்பண்புகள், உயர்கல்வி, சமூக அறம் இவற்றைக் கற்று, ஆசிரியர் வழி நின்று, மாணாக்கர் வளர - வாழ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

" இன்றைய இளைஞரே நாளைய தலைவர்
என்றும் அதனால் உழைத் துயர்வீரே "

ஆறுகளை நாட்டுடைமையாக்குக

திரு. புருஷோத்தமன், அரக்கோணம்.

சுதந்திரமடைந்து 42 ஆண்டுகள் முடிவடையப் போகின்ற நிலையில் வளர்ச்சிப் பாதையில் உலக அரங்கில் பல நாடுகளுடன் நம்மை ஒப்பிட்டுப் பார்க்கும் போது எவ்வளவு பின்தங்கியுள்ளோம் என்பதை அறிய முடிகிறது. இந்நிலைக்கான காரணங்கள் என்ன என்பதை நாம் அறிந்தும் அதை நிறைவேற்ற வேண்டிய தொலை நோக்குத் திட்டத்துடன் செயல்படாததால் நம் நாடு வளர்ச்சியடையவில்லை என்பதை அறியமுடிகிறது.

பல நூற்றுண்டுகளுக்கு முன்னரே நாடு வளர்ச்சியடையக் கடைப்பிடிக்க வேண்டிய சில நெறிமுறைகளைத் தமிழ் மூதாட்டி ஔவையார் செய்யுளின் மூலம் விளக்குகிருர்; அந்தச் செய்யுளைக் கடைப்பிடித்தால் நாட்டை வளத்துடன் இட்டுச் செல்லமுடியும் என்பதை அன்றே எழுதிவைத்துள்ளார். வரப்புயர நீர் உயரும்; நீர் உயர நெல் உயரும், நெல் உயரக் குடி உயரும், குடி உயரக் கோன் உயர்வான். கோன் உயர்ந்ததாலே நாடு வளர்ந்தது என்று பொருள் படும்படி ஔவையார் கூறுகிருர். நாடு வளர்ச்சியடைவதற்குத் தேவை விவசாயப் புரட்சி. அதன்மூலம் தான் மக்கள் மகிழ்வுடன் இருக்கமுடியுமென்பதை அன்றே அறிந்துவைத்துள்ள அவர் ஒரு தீர்க்கதரிசியாவார். அவருடைய கருத்தை நம்நாட்டை ஆள்பவர்கள் ஏற்காததால் நம் நாடு வளர்ச்சியடைய முடியவில்லை என்பதை மட்டும் உறுதியாகக் கூறமுடியும்.

நம்நாட்டின் மக்கள் தொகையில் 70சதத்தினர் அடிப்படைத் தொழிலாகமேற்கொள்வது விவசாயத் தொழிலாகும். விவசாயத்தை நம்பித்தான் நாமிருக்கிறேம். சில மாநிலங்களில் மட்டும் வற்றுத ஜீவநதிகள் ஓடி அம் மாநிலத்தைச் செழிக்கச்செய்கின்றன. சிலமாநிலங்களை மட்டும் ஆண்டுக்காண்டு வறட்சி ஆட்டிப்படைக்கிறது ஏன்? குடிக்கத் தண்ணீரே இல்லாத நிலை ஏற்பட்டு அந்த மாநிலங்கள் கோரப்பிடியில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கின்றன. இப்படி மனிதனுக்குக் குடிக்கத் தண்ணீரே இல்லாத போது நம் நாடு வளர்ச்சியடைந்து விட்டது என்று எவ்வாறு கூறமுடியும்? இப்படிப்பட்ட நிலையில் அந்த மாநிலங்களில் விவசாயிகள் விவசாயத்தை எவ்வாறு செய்யமுடியும்? ஏன் இந்த அவல நிலை? இனியும் இந்த நிலை தொடரவேண்டுமா? வறட்சியைப் போக்குவதற்குப் பல ஆயிரம் ஆழ்துளைக் கிணறுகள் தோண்டப்படுகின்றன. இப்படித் தோண்டப்படுவதால் நிலத்தடி நீர் குறைகிறது என்று நிபுணர்கள் கவலை தெரிவித்திருக்கின்றனர். இந் நிலை இன்னும் தொடராமல் இருக்கவும் எல்லா மாநிலங்களையும் செழிப்புடன உருவாக்கவும் இந்திய மக்கள் அனைவருக்கும்

42-ஆவது சுதந்திர ஆண்டிலாவது குடிக்கத்தண்ணீர் கிடைக்கவும் விவசாயப்புரட்சியை ஏற்படுத்தவும் ஆறுகளைத் 'தேசியமயமாக்கு வது அவசியம்'' இல்லையெனில் நாம் வளர்ச்சியடையவே முடியாது.

ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடு இல்லாமல் பலன் கிடைக்கவேண்டுமென்று 20-அம்சத் திட்டம் கொண்டு வந்து அன்றைப் பிரதமர் இந்திரா காந்தி வங்கிகளைத் தேசியமய மாக்கினர். அவ்வாறு செய்யப்பட்டதால் தான் ஏழை எளியவர் உள்பட அனைவரும் வங்கிகளில் கடனுதவி பெற முடிகிறது. தேசியமயமாக்கப் படாமல் இருந்திருந்தால் நிலைமை என்ன ஆகியிருக்கும் என்று நினைத்துப்பார்க்கவே பயமாகவுள்ளது. அதே போல் ஆறுகளைத் தேசியமயமாக்கியிருந்தால் நாம் குறிப்பிட்ட அளவிற்கு வளர்ச்சியடைந்திருப்போம்; அவ்வாறு இல்லாத நிலையில் மாநிலத்துக்கு மாநிலம்வேறுபாடுகள் உள்ளன. இவ்வேறு பாடுகளை அகற்ற மத்திய அரசு தலையிட்டு நடவடிக்கையெடுக்க வேண்டும்.

கர்நாடக மாநிலத்தின் வழியாகவரும் காவேரி ஆற்றின் தண்ணீர் அவர்கள் மாநிலத்தில் மட்டும் பயன்படும் வகையில் பல அணைகள்கட்டித் தண்ணீரைத்தேக்கிவைத்துள்ளனர். காவேரியை நம்பியுள்ள தஞ்சை மாவட்டங்களில் குடிநீர் கூட இல்லாமல் மக்கள் அவதிப்படுகின்றனர். அப்படித் தண்ணீர் தேவையானல், கர்நாடக அரசிடம் தமிழக அரசு கேட்டபின் சில டி. எம். சி. தண்ணீர் மட்டும் கிடைக்கும்; 'இல்லை' என்ற பதிலும் தரப்படும். கேரள மாநிலத்தில் மேற்கே நோக்கிப் பாயும் ஆறுகளின் தண்ணீர் வீணாகக் கடலில் கலக்கிறது. ஆனல், அவைகளைத் தமிழகத்தின் பக்கம் திருப்பிவிட்டால், தண்ணீர் பிரச்சினை தீரும். ஆனல் கேரள அரசு தமிழகம் பக்கம் ஆறுகளைத் திருப்ப மறுக்கிறது. இப்படிப்பட்ட பாதிப்புகள் ஏற்படுவதால் ''தேசிய அளவில்'' இப்பிரச்சினையைத் தீர்க்க ஒரு கமிஷன் நியமித்து எல்லா மாநிலப் பிரதிநிதிகளையும் அழைத்து ஆலோசனை பெற்று அரசியல் சட்டச் சீர்திருத்தம் கொண்டு வந்து ஆறுகளைத் தேசிய மயமாக்க வேண்டும். எல்லா கிராமங்களும் வளர்ச்சியடைய வேண்டுமென்று ''பஞ்சாயத்து ராஜ்'' க்கென அரசியல் சட்டத் திருத்தம் கொண்டுவந்தது போல் ஆறுகளைத் தேசியமயமாக்கவும் சட்டத்திருத்தம் கொண்டு வரப்படவேண்டும். அரசியல்காரணங் களுக்காக பிரச்சினையை மத்திய அரசு தள்ளிப் போடுமாளுல், தேசிய அளவில் உள்ள பொதுநல அமைப்புகள், பொதுநல ஊழியர்கள், பத்திரிகைகள், பொதுமக்கள் அனைவரும் இணைந்து ஓர் இயக்கமாகச் செயல்பட்டுத் தேசிய அளவில் போராட முன் வந்தால்தான் இப்பிரச்சினையைத் தீர்க்கமுடியும்.

மதுரையில், தருமை ஆதீனம்

ஸ்ரீ சொக்கநாதர் திருமண மண்டபம்

திறப்பு விழா

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருவுளப் பாங்கின்வண்ணம் மதுரை வடக்கு மாசிவீதி ஸ்ரீகுருஞானசம்பந்தர், திருமடத்தின் பிற்பகுதியில் தருநாதன் கோயில்தெரு ஆதீன வளாகத்தில் புதிதாகக் கட்டப் பெற்றுள்ள 100×36 அளவுள்ள ஸ்ரீ சொக்கநாதர் திருமண மண்டபத் திறப்பு விழாவும், மதுரை ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றச் சார்பில் திருமுறை விழாவும் தருமபுர ஆதீனம் அண்ணாமலைச் சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் மதுரை மையத்தில் நடைபெறும் சைவ சித்தாந்த மாலை நேரக்கல்லூரியில் பயின்று தேர்ந்தவர்கட்குச் 'சைவ சித்தாந்தப் புலவர்' பட்டமளிப்பு விழாவும் 4—9—89, 5—9—89, 6—9—89 திங்கள், செவ்வாய், புதன் கிழமைகளில் சிறப்பாக நடைபெற்றன.

4—9—89 திங்கட்கிழமையன்று காலை கணபதி ஹோமம், உமாமகேசர்ஹோமம் ஆகியவை மங்களஇசையுடன் தொடங்கிற்று, அடுத்துச்சிவபூசகர்களின் சிவபூஜை, உமாமகேசரர்கலசாபிஷேகம். நவக்கிரக ஹோமம் ஆகியவை நடைபெற்றன. மதுரைத் திருப்பதிகம், அகத்தியர் தேவாரத்திரட்டு ஆகியவை அகண்ட பாராயணம் செய்யப்பெற்றது. நண்பகல் 12-30 மணியளவில் நவக்கிரக ஹோம நிறைவும் பூர்ணாகுதி தீபாராதனையும் நடை பெற்றன. பகல் 1 மணிக்கு மாகேசுவரபூஜை நடைபெற்றது.

அன்று மாலை 4 மணி முதல் ஸ்ரீ சொக்கநாதர் திருமண மண்டபத் திறப்பு விழாவும் திருமுறை விழாத் தொடக்க விழாவும் நடைபெற்றன. 4-மணி அளவில் சொக்கநாதவெண்பா முற்றோதல் நிகழ்ந்தது. திருமதி. சிதம்பரவடிவு செல்வவிநாயகம் மற்றும் திரு. மகேஸ்வர்லால், B. E., ஆகியோரின் திருமுறை இசையுடன் விழாத் தொடங்கிற்று. மதுரை ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றத் தலைவர் திரு. பி. டி. ஆர். கமலைத்தியாகராஜன் அவர்கள் தலைமைவகித்தார், திருவண்ணாமலை ஆதீனம் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ தெய்வ சிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் (தவத்திரு. குன்றக்குடி அடிகளார்) மண்டபத்தைத் திறந்துவைத்தும் திருமுறை விழாவைத் தொடங்கி வைத்தும் அருளாசிவழங்கினார்கள். திருமண மண்டபத்திறப்பு விழாமலராகத் 'திருமணம்' என்றநூல் வெளியிடப் பெற்றது. டாக்டர் திரு. சி. இ. சூரியமூர்த்தி நன்றி கூறினார்.

5—9—89 செவ்வாயன்று பேரப்பன்வலசைத் திருப்பணிச்செல்வர் திரு. வி. திருஞானம் வரவேற்புரை நிகழ்த்தினர். திருமுறைகளில் இறை, உயிர், தளை பற்றிய தலைப்பில் வினாவிடை அரங்கம் நடைபெற்றது. டாக்டர் திரு. டி. பி. சித்தலிங்கையா தலைமை வகித்தார். செல்வி. சந்திரா சுந்தரம், திரு. என். எஸ். குபேந்திரன், திரு. தி. இராமன், திரு. ச. சந்திரசேகரன் ஆகியோர் வினாத்தொடுத்தனர். டாக்டர் திரு. ச. கங்காதரன், டாக்டர் திரு. ஆ. ஆனந்தராசன் புலவர் திரு. நி. சி. சுந்தரராமன் ஆகிய அறிஞர்கள் விடை வழங்கினர். புலவர் திரு. கி. கல்யாண சுந்தரம் நன்றியுரை கூறினர்.

6—9—89 புதனன்று மாலை 5 மணி அளவில் திருமுறைவிழா நிறைவும் பட்டமளிப்பு விழாவும் நடைபெற்றன. தேவார இசைமணி திரு. திருஞானசம்பந்த ஓதுவார் திருமுறை ஓதியபின் வித்துவான் மதுரை திரு. தா. குருசாமி தேசிகர் வரவேற்புரை வழங்கினர். மதுரை, தொழிலதிபர் திரு. வெ. நாராயணன் செட்டியார் தலைமை வகித்தார். மதுரை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. பி. டி. ஆர். பழநிவேல்ராஜன், சைவசித்தாந்த மாலை நேரக் கல்லூரியில் பயின்று தகுதி பெற்றோர்க்குச் சைவ சித்தாந்தப் புலவர், இளம்புலவர் ஆகிய பட்டங்களை வழங்கி உரை நிகழ்த்தினர். டாக்டர் திரு. சி. இ. சூரியமூர்த்தி நன்றிநவில கடவுள் வாழ்த்துடன் திருமுறை விழா நிறைவுற்றது.

இந்தியக் குடியரசுத் தலைவரின்
வேளூர் (வைத்தீசுவரன்கோயில்) வழிபாடு

தருமை ஆதீனத்தின் அருளாட்சியில் விளங்கும் இருபத்தேழு தேவஸ்தானங்களுள் வைத்தீசுவரன்கோயில் என வழங்கும் வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானமும் ஒன்று. இத்திருக்கோயிலில் பிரார்த்தனை நிறைவேற்றும் பொருட்டு இந்தியக் குடியரசுத் தலைவர் மாண்புமிகு திருவாளர். ஆர். வேங்கடராமன் அவர்கள் தம் துணைவியாருடன் திருக்கோயிலுக்கு 6—9—1989 காலை 10 மணி அளவில் விஜயம் செய்து வழிபட்டார். தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் குடியரசுத் தலைவர் வருகையையொட்டிச் சிறப்பாக வரவேற்பு அளிக்கத் தேவஸ்தானத் திற்கு உத்தரவுகள் பிறப்பித்திருந்தார்கள். வித்துவான் ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான், வித்துவான் ஸ்ரீமத். மௌன மகாலிங்கத் தம்பிரான், மயிலாடுதுறை வழக்குரைஞர் திரு. சி. ஆர். குஞ்சித பாதம் அய்யர், தருமை ஆதீனம் தேவஸ்தானம் மேலாளர், மற்றும் உயர் அலுவலர்கள் குடியரசுத் தலைவர் வருகையை ஒட்டி ஆதீனச் சார்பாக வரவேற்பு அளித்தனர். பிரமுகர்களும், அறநிலையத்துறை

அதிகாரிகளும் அலுவலர்களும், பிற துறையினரும் குழுமி இருந்து வரவேற்றனர்.

முற்பகல் 10-10 க்கு வைத்தீசுவரன்கோயிலுக்கு வந்துசேர்ந்த குடியரசுத்தலைவர் சிவப்புக் கம்பளம் விரித்துச் வரவேற்கப்பெற்றார். திருக்கோயில்வாயில் முன் பூரணகும்ப மரியாதை அளிக்கப் பெற்றது. சித்தாமிர்தத் தீர்த்தக் குளத்தில் இறங்கி நீர்தெளித்துக் கொண்டு ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ வைத்தியநாத சுவாமி, ஸ்ரீ செல்வ முத்துக்குமார சுவாமி, ஸ்ரீ தையல்நாயகி அம்பாள் சந்நிதிகளில் அருச்சனை செய்து கொண்டு சிரத்தையுடன் வழிபாடு ஆற்றினார்; பரிவட்டம் கட்டிப் பிரசாதம் வழங்கப்பெற்றது.

குடியரசுத் தலைவரின் துணைவியார் அம்பாள் சந்நிதியில் மாவிளக்குத் தீபம் ஏற்றி விதிமுறைபடி வழிபாடு ஆற்றிப் பிரார்த்தனையை நிறைவேற்றினார்.

வழிபாட்டின் நிறைவில் குடியரசுத் தலைவரையும் அவர்தம் துணைவியாரையும் பட்டுக் கம்பளத்தில் அமர்வித்துத் திருக்கோயில் பிரசாதங்களை சிவாசாரியர்கள் ஆகம பத்ததியுடன் இறையருளை வாழ்த்தி ஆசிகூறி வழங்கினார்கள். திருமுறை ஓதப்பெற்றது. ஆதீனச் சார்பில் ஆங்கிலத்தில் வாழ்த்திதழ் வழங்கப்பெற்றது. கொடிமரத்தடியில் ஜனாதிபதியும் அவர்தம் துணைவியாரும் முறையே அஷ்டாங்க பஞ்சாங்க நமஸ்காரம் செய்து விடை பெற்றார்கள்.

வழிபாடு ஆற்றிய மனமகிழ்ச்சியும் ஆதீனத்தின் சார்பில் அளிக்கப்பெற்ற சிறந்த வரவேற்பில் மன நிறைவும் பெற்ற குடியரசுத் தலைவர் சிரித்த முகத்தோடு விடைபெற்றுக்கொண்டு தம் பயணத்தைத் தொடர்ந்தார்.

தருமை ஆதீனம் சீகாழி - தென்திருமுல்லைவாயில் ஸ்ரீ முல்லைவனநாதசுவாமி தேவஸ்தானம் மகாகும்பாபிஷேக விழா

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானத்துடன் இணைந்துள்ளதலம் திருமுல்லைவாயில் இத்தலம் திருஞானசம்பந்தர் திருப்பதிகம் பெற்றது, கயிலையில் சிவபிரானிடம் பஞ்சாட்சர உபதேசம் பெற்ற அம்பிகை இத்தலத்திற்கு எழுந்தருளிப் பெருமானைப் பூசித்து அருள்பெற்றார். மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றாலும் சிறப்புடைய இத்தலத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ முல்லைவனநாத சுவாமி திருக்கோயில் சிதம்பரம் திரு. ஆர். இராமநாதன் செட்டியார், திரு. இராமலிங்கம் செட்டியார் திருமுல்லைவாயில் திரு. அருள்ராமநாதன், திரு. பக்கிரிசாமி மற்றும்

உள்ளூர், வெளியூர் பக்தர்களின் நன்கொடைப் பணியாகப் புதுப்பிக்கப் பெற்று, சுக்கில - ஆவணி 22 ஆம் நாள் (7—9—89) வியாழன் காலை 9-30 மணிக்குத் தருமை ஆதீனம் 26 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருமுன்னிலையில் மகாகும்பாபிஷேகம் வேத சிவாகம முறைப்படி சிறப்பாக நடைபெற்றது.

வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானச் சார்பில் 104'×22' அளவில் இத்திருக்கோயில் பஞ்சமூர்த்தி சுதைச்சிற்ப நுழைவாயில்முதல் சுவாமி சந்நிதி மண்டபம் வரை ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் ஷெட்டு அமைத்தும், சிவாசாரியர்க்கு சந்நிதி வீதியில் இல்லம் கட்டுவித்தும் வடுகநாததேசிகர் இயற்றிய திருமுல்லை வாயில் "தலபுராணம்" என்ற நூலை கும்பாபிஷேக விழாமலராக வெளியிட்டும், திருமுறை விழா நிகழ்த்தியும் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் திருப்பணி செய்தருளியுள்ளார்கள்.

மகாகும்பாபிஷேக விழாவையொட்டி 4—9—89 திங்கட்கிழமை தொடங்கி 7—9—89 வியாழன் மாலை வரை திருமுறைப் பெருவிழா திருஞானசம்பந்தர் காவணத்தில் இனிது நிகழ்ந்தது. 4—8—89 திங்களன்று மாலை தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் ஆசியுரை வழங்கித் திருமுறைவிழாவைத் தொடங்கி வைத்தார்கள். கயிலைமாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் 5—9—89 மாலை நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். 6—9—89 அன்றுமாலை திருவாவடுதுறை ஆதீனம் இளையசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவான தேசிக சுவாமிகள் யாகபூஜா காலத்தில் எழுந்தருளித் தரிசனம் செய்தார்கள். 7—9—89 வியாழன் காலை திருமுல்லைவாயில் தேவாரக்கல்வெட்டு, தமிழ்நாடு அரசு இந்துசமய அறநிலையத்துறை செயலாளர் திரு. கு. ஆளுடையபிள்ளை ஐ.ஏ.எஸ்., அவர்களால் திறந்து வைக்கப்பெற்றது. திருமுறைப் பெருவிழாவில் பன்னிரு திருமுறைகள் பற்றிய விரிவுரைகள் தக்க புலவர்களைக் கொண்டு நிகழ்த்துவிக்கப் பெற்றன.

தருமை ஆதீன அன்பர்களும், அறிஞர்களும் திருமுறைத் விழாத் தொடக்கவுரையாற்றினா. தருமை ஆதீன இசைப்புலவர், திரு. ஏ. கே. சி. நடராசன் குழுவினர் கிளாரினெட் இசை, திருமதி. கமலாமூர்த்தி அம்மையாரின் இன்னிசை விரிவுரை, பிரபல நாதசுரக் கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன.

7—9—89 வியாழன் மாலை மகாகும்பாபிஷேகமும் இரவு சுவாமி அம்பாள் திருக்கல்யாணமும் பஞ்சமூர்த்திகளின் திருவீதி யுலாக் காட்சியும் சிறப்பாக நடைபெற்றன. யாகபூஜா காலங்களுக்கும் மகாகும்பாபிஷேகத்திற்கும், திருக்கல்யாணத்திற்கும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்கட்குப்பிரசாதம் வழங்கினார்கள். திருப்பணியில் பங்கேற்ற அன்பர்களை ஆசீர்வதித்தருளினார்கள். பக்தர்கள் தரிசனம் செய்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் பயனடைந்தனர்.

தருமை ஆதீனம் வேளூர் தேவஸ்தானச் சார்பில்



இந்தியக் குடியரசுத் தலைவரையும் அவர் தம் துணைவியாரையும்
வரவேற்று சுவாமி தரிசனத்திற்கு அழைத்துச் செல்லுதல்.

குடியரசுத்தலைவரின் துணைவியார்
ஸ்ரீ தையல்நாயகி அம்பாள் சந்நிதியில்



மாவிளக்குத் தீபம் ஏற்றி வழிபட்டுப்
பிரார்த்தனை நிறைவேற்றும் காட்சி.

மேலை நாட்டுத் தத்துவ மேதைகள்
(Western Philosophers)

சுவாமி வீரபாகு

7. புளோட்டினஸ் (Plotinus)

(கி. பி. 204–269)

(மலர் 48, இதழ் 10, பக்கம் 467 இன் தொடர்ச்சி.)

தத்துவவாதி தேவையில்லை :

சக்கரவர்த்தி மூன்றும் கார்டியன் முன், சற்று அடக்கத்துடன் ஓர் இளைஞன் வந்துநின்றான். பேரரசன் அவனுடன் பலவிஷயங்களைப் பற்றிப் பேசினான். இறுதியாக அவ்விளைஞனை கார்டியன் (Gordian III) ஏற இறங்கப் பார்த்துவிட்டுப் பகர்ந்தான்.

''எனக்குத் தகுதிவாய்ந்த படைவீரர்தான் தேவை. தத்துவ வாதி தேவை இல்லை'' என்றான். ''நான் தத்துவ ஞானத்தில் நன்றாகத் தேர்ச்சியடைந்துள்ளேன். பெர்ஷியா (Persia), இந்தியா போன்ற நாடுகளில் நான் பெருமையாக நம் தத்துவ ஞானத்தைப் போதிக்கலாம் அல்லவா, மாமன்னரே!'' என்று அடக்கத்துடன் அறிவித்தான்.

சக்கரவர்த்தி சிலவினாடிநேரம் சிந்தித்தான். ''நல்லது! என் படையெடுப்புடன் நீயும் படைவீரனாக வா! தக்கசமயம் வாய்த்தால் நீ உன் தத்துவ ஞானச்சரக்கை விற்பனை செய்யலாம்'' என்றான் சக்கரவர்த்தி. ஆனால் இளைஞனுக்கு அப்படைஎடுப்பின் போது இம்மியளவும் தன் சரக்கை விற்பனை செய்ய வாய்ப்பு ஏற்படவில்லை. புறப்பட்டு உடன் சென்ற புளோட்டினஸ் (Plotinus) ஏமாற்றம் தான் அடைந்தான். ஏதும் பயன்கிடைக்கவில்லை. என்ன செய்வது? எண்ணி எண்ணி வருந்தினான். அவ்வளவுதான்!

புளோட்டினஸின் வரலாறு :

புளோட்டினஸ் எகிப்து நாட்டில் கி. பி. 204இல் லிகோபாலிஸ் (Lycopolis) என்ற நகரத்தில் பிறந்தார். அலெக்ஸாண்டிரியாவில்

(Alexandria) அதிகீர்த்தியோடு விளங்கிய அம்மோனியஸ்சாக்காஸ் (Ammoniua Saccas) என்ற தத்துவமேதையின்பால் பதினோராண்டுக் காலம் தத்துவம் பயின்றார். அவனுடைய தூண்டுதல்மேல்தான் புளோட்டினஸ் கீழ்த்திசைப் படையெடுப்பில் சக்கரவர்த்தி கார்டியனோடு புறப்பட்டுப் போனான். அவன் அமைதியற்று அதிருப்தியோடு வாழ்ந்துவந்தான். அதற்குக்காரணம் உண்டு. ரோமானியப் பேரரசு அவன் காலத்தில் சிதறுண்டு போய்க் கொண்டிருந்தது. தனி மாகாணங்களை ஆண்டு வந்த சிற்றரசர்கள் தாங்களே மக்களை அடக்கிவிட்டு மாபெரும் புரட்சிகள்செய்யத் தொடங்கினர். வெளிநாட்டுக்காரர்களின் படை எடுப்பு வேறு வந்துற்றது. சிதறுண்டு போய்க் கொண்டிருந்த ரோமாபுரி சாம்ராஜ்யத்தின் சிற்றரசர்கள் ஒருவரோடொருவர் ஓயாமல் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். எங்கும் பஞ்சமும், பிளேக் போன்ற நோய்களும், அநீதியும், பலாத்காரமும் தாண்டவம் ஆடித் திரிந்தன. இந்த நேரத்தில் தான் இலக்கிய வாதிகளும் தத்துவ ஞானிகளும் வாழ்வின் நோக்கத்தைப் பற்றி வாதாடினர். அப்போது அங்கே வளர்ந்து வந்த கிருத்தவம் கொஞ்சம் அதற்கு விடையை விளக்கியது. என்றாலும் கிரேக்கப் பாரம்பரியத்தில் வந்த புளோட்டினஸ் போன்றார் வேறு பதில்களிலே நாட்டம் கொண்டு வெவ்வேறு கோணங்களில் நுழைந்து விடை காண முயன்றனர். கிருத்தவம் சரியாகப் பயன்தரவில்லை.

பரிவோடு பெர்ஷியாவுக்கு கார்டியன் சக்கரவர்த்தியோடு போன புளோட்டினஸ், அந்தப் படை எடுப்பினால் யாதும் பயன் எய்தவில்லை. மெசபடோனியாவில் மாமன்னன் கார்டியன் எதிர் பாராத வகையில் கொலைசெய்யப்பட்டு மாண்டு போனான். புளோட்டினஸ் உயிர் தப்பித் திரும்பினான். அறுநூறு ஆண்டுகட்கு முன் பிளேட்டோ போதித்த கருத்துக்களைத் துருவி ஆய்வு செய்ய ஆரம்பித்தார் புளோட்டினஸ். உலகனாவிய ஓர் உண்மை, மெய்ப் பொருள், இலட்சியம் ஒன்று உண்டு என்பதையும், அது தூய உணர்வுடைய ஆத்மாக்களுக்குத் தோற்றம் தரும் என்ற பிளோட்டோவின் இந்தப் பேருண்மை பற்றி விளக்கம் தரத் தொடங்கினார் பிளோட்டினஸ். அந்தப் பேருண்மையை பிளோட்டினஸ், சமய, நீதி சாத்திர, தத்துவஞானப் பார்வையில் நோக்கித் தனக்கென ஒரு சார்பை ஏற்படுத்திக் கொண்டார். அதுதான் பிற்காலத்தில் புதிய பிளேட்டோனிசம் (Neoplatonism) எனும் புதுப்பெயர் பெற்று விளங்கியது.

வாழ்ந்து காட்டி வழி காட்டியவர் :

தத்துவமேதை பிளோட்டினஸிக்குத் தனிச்சிறப்பு ஒன்று உண்டு. தான் எதனைப் போதித்தாரோ அதனையே தன் வாழ்வில்

பின்பற்றினர் - பின்பற்றிப் பிறருக்கு எடுத்துக் காட்டாக நின்ருர். ஆகையால் அவருக்குத் தத்துவமேதைகள் வரிசையிலே அரிய தொரு செல்வாக்கு இருந்தது. இவர் வாழ்ந்த காலத்திலும், அவர் மறைந்த பின்னும் ஏற்றம் கொடுத்து இவரை மதித்தனர் - மதித்துச் சிறப்பிடம் தந்தனர். நமக்கு அவர் போதித்த அத்தனைக் கருத்துக்களும், மற்ருெரு தத்துவமேதையான ஃபேர்பரி (Parphry) என்றவர் மாபெரும், மதிப்புத் தந்து தொகுத்துத்தந்துள்ளார். இவர் புளோட்டினஸ் தத்துவ மேலான கருத்துக்களை ஆறு புத்தகங்களாகத் தொகுத்து வழங்கியுள்ளார். ஒவ்வொருபுத்தகமும் என்னீட்ஸ் (Ennedds) என்று அழைக்கப்படும். புளோட்டினஸ் தம் புதியபிளோட்டினியக் கோட்பாட்டில் (Neoplatonism) அநேகமாக பிளேட்டாவின் கோட்பாடுகளையே கொஞ்சம் புதுப்பொலிவூட்டிக் கூறுகிருர்.

புதிய பிளோட்டோனிசம் : (Neoplatonism)

பிளோட்டினஸ் கூறிய கோட்பாட்டினைப் பொதுப்படையாக எடுத்து ஆய்வோம். உலகத் தோற்றத்திற்கு முக்கிய மூலம் இறைவனே. அவன் ஒருவனே தேவன். அவன் நற்குணத்தின் திருவுரு; இந்த பிரபஞ்சம் அந்த ஒருவன் பால் இருந்து ஆக்கம் பெற்றது என்ருலும், அந்த ஒருவன் மாற்றம் ஏதும் இல்லாதவன் - மாற்றுக்குறையாதவன். கண்ணடி ஒரு பொருளைப் பிரதிபலித்துக் காட்டும்போது களங்கம் ஏதுமின்றிக் கச்சிதமாகக் காட்டுவது போல, இறைவனும் ஏதொருமாற்றமும் அற்றுநின்று நிலவுகிருன். இந்த ஒர் இறைவன் அழிவற்றவன், சொல்லால் இஃது என்று சுட்டிக் காட்டப்படமுடியாதவன், வருணனைக்கு அப்பாற்பட்டவன் (Transcending description) அல்லது பகுத்தறிவு கொண்டு புரிந்து கொள்ளமுடியாதவன். நிலைபேற்றினையும் கடந்து நிற்பவன். ("Peyond existence") பூரணத்துவத்திற்குச் சமீபிப்பவருக்கு (Who are nearest to petfection) சில வேளைகளில் உள்ளொளி அடையப் பெறுபவனுகவும் இறைவன் இலங்குகிருன். பிளேட்டோ கூறுவது போல, இவர் கோட்பாட்டின்படி இறைவன் முடிவான சத்தியத்தின் பிழிவாகவும் (The ultimate essence of truth) திகழ் கிருன். இவருக்குக் கீழை நாட்டுத் தத்துவ மேதைகள் எவரும் பார்வைக்குக் கிட்டவில்லை. எனினும் வடமொழியிலுள்ள பௌத்த நூலாகிய "சுரங்கம சூத்திரம்" என்ற நூலின் கருத்தை புளோட்டினஸ் தம்போதனைகளில் பிரதிபலிப்பது நறிப்பிடத்தக்கது. இப்படி வெவ்வேறுநாட்டில் உதித்தமேதைகள் ஒருவருக்கொருவர் கருத்தால் ஒன்று பட்டிருப்பதை நாம் பலவேளைகளில் பார்க்கத் தான் செய்கிருேம்.

கடவுளைக் கண்ட மேதை :

பிளோட்டினஸ் தாம் தம் வாழ்வில், நான்கு சந்தர்ப்பங்களில், உயிருமோக அந்த ஏகநாயகனை இறைவனைக் கண்டு தரிசித்திருப்பதாகத் தம் போதனையில் குறிப்பிடுகிருர். சற்று சூக்கும முறையிலே இதனைச் சாற்றுகிருர் பிளோட்டினஸ். நாம் காண பிரயத்தனம் செய்யும் அந்தப்பெருமான் ஒளிவடிவு கொண்டவன். நமக்கும் அவன் வெளிச்சத்தைத் தருகிருன். எதைப்போல என்ருல், நாம் கதிரவனைக் காணவேண்டும் என்ருல் அவன் தரும் வெளிச்சத்தின் மூலமாகத்தானே நாம் கண்ணல் காண்கிருேம். இந்த ஈசனை நாம் எப்படிக் காணமுடியும்? எல்லாவற்றையும் கடந்த அதீத நிலையில் இவனை அனுபவபூர்வமாகக் கண்டு மகிழலாம். (Divest thyself of every thing) என்கிருர் பிளோட்டினஸ்.

பிளோட்டினஸ், அந்த ஒரே தேவன் "நௌஸ்" (nous) என்ற தத்துவத்தை உண்டாக்கினுன் என்று நம்பினர். 'நௌஸ்' என்ற தத்துவம், கடவுளின் பிம்பம் போன்றது - தூய்மையானது, அழிவற்றது, மானிட அறிவுக்கு எட்டாதது. இதிலிருந்து இரண்டு ஆன்மாக்கள் வெளிப்பட்டன. பிளேட்டோ ஒரே "உலக ஆன்மா"வைக் கருதிப்போதித்தார். புளோட்டினஸ் அதனையே இரண்டு தன்மைகள் கொண்ட ஓர் உலக ஆன்மா என்று கொண்டார். ஒன்று உயர்நிலை - அது "நௌஸ்" தத்துவத்தை நெருங்கியுள்ளது மற்ருென்று கீழ்நிலையில் உள்ளது. அந்த கீழ்நிலை ஆன்மாவே இயற்கை என்றும் அழைக்கப்பட்டது. அதுவே காணும்பொருள்களை எல்லாம் தோற்றுவித்தது. பிளோட்டினஸ் அடுத்துஒருநம்பிக்கையையும் கொண்டிருந்தார். இறப்பிற்குப் பிறகு இன்னொரு உலகம் (afterworld) உண்டெனப் போதித்தார். அது சூக்குமலோகம். அந்த உலகத்திற்கு உயர்ந்த ஆன்மாக்கள் சென்று பேரின்பம் துய்ப்பார்கள் என அவர் கருதினர்.

இவர்காலத்தில் கிருத்தவம் கிளர்ந்தெழுந்து வளர்ந்துவந்தது. ஆனல் பிளோட்டினஸ் அதில் அக்கறை காட்டவில்லை. அவர்தாம் கிரேக்க மரபு தத்துவத்தையே அற்புதமானது எனக்கொண்டார். இவரது புதிய பிளேட்டோனியம் கிரேக்க - ரோமானிய சமுதாயத்தின் மேதாவிலாசத்தையே மெத்ததழுவியற்றது. இவர் போதித்த சீரிய கருத்துக்கள், சுவர்க்கம் பற்றிய விளக்கம், மெய்ஞ்ஞானம், கடவுள் தாகம், ஆன்மாவின் அழிவின்மை, சுய - தூய்மை, இலட்சியங்களைப் பற்றி நிற்றல் ஆகியவை கிருத்துவ சமயவாதிகள் மேல் செல்வாக்குப் பெற்றன என்ருல் அது மிகையாகாது.

பிளோட்டினஸுக்குப் பிறகு :

இவருக்குப்பிறகு இவர் போதனைகளை "என்னிமீட்ஸ்" என்ற ஆறு நூல்கள் மூலம் இவர்தம் சீடர் ஃபோர்ஃபிரி (Porphyry) வெளி

யிட்டார். ஆனால் அந்நூல்கள் காலவெள்ளத்தில் நிற்கவில்லை. அவரது போதனைகள் இயல்பாகவே சூக்குமமாகவும், தெளிவற்ற எண்ணத்திரளாகவும், தொகுப்பில் பாவினப்பட்டதாகவும் இருந்ததால் விரிந்து படரவில்லை. அத்தோடு சரியான கை எழுத்துப் பிரதிகள் கிடைக்காததால் மக்களால் அது மதிக்கப்படவில்லை, வெற்றி பெறவில்லை எனவும் கூறலாம்.

ஆதார நூல்கள் :

Basic Teachings of Great Philosophers by S. E. Frost
Living Biographies of Great Philosophersby Thomos & Thomo[s]
Philosophy Made Simple by Richard H. Popkin and Avrom [Strol]
Get to know Philosophy by Hugh Harris.
Student's History of Philosophy by Arthur Kenyon Rogers
A History of Philosophy by Frank Thilly.

(தொடரும்)

கடிதம்

சுவாமி வீரபாகு குகானந்தா,
நாடியம் திருமடம்.

நாடியம் - 614802,
பேராவூரணி வட்டம்
(தஞ்சைமாவட்டம்)
19—8—89.

வணக்கத்திற்குரிய தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பொன்னார் திருவடிகளைப் போற்றி எழுதுவது.

வணக்கம். ஆனித்திங்கள் (10—7—89) ஞானசம்பந்தத்தில் சந்நிதானம் அவர்களின் ஆசியுரை அழகுற அமைந்திருந்தது. ஸ்ரீ குமரகுருபரரின் நூல்களைப் பற்றிய ஆய்வு அருளுரை, ஆய்வுக்கோர் அழகிய எடுத்துக்காட்டாக விளங்கியது. குறிப்பாக, குமரகுருபரரின் 'கந்தர் கலிவெண்பா' பற்றிய விளக்கக் கருத்துரைகள் வினயமாகவும், வித்தகமாகவும் அமைந்துள்ளது தனிச் சிறப்பாகும். ஆசி அருளுரையின் இறுதியில் 'தொடுக்கும் கடவுள் பழம் பாடல்' செய்யுள் விளிவிளக்கம் 'ஒழுகொழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிரோவியமாக' - உயர்வாக, உன்னதமாக அமைந்துள்ளது.

இங்ஙனம் ஸ்ரீலஸ்ரீசந்நிதானம் அவர்களின் அருள் ஆசியுரைகள் அருந்தமிழ் நாட்டை அருட்பாதையில் அழைத்துச் செல்வதாகத் திகழ, செந்திலாண்டவன் திருவடிகளை வந்தித்து வழிபடுகிறேன்.

யார் பெரியர்?

புலவர் திரு. ச. சுந்தரேசம் பிள்ளை,
சிதம்பரம்.

மணிவாசகர் துதி

" சிற்றம் பலக்கோவை தேன்சொரியும் செம்மலே!
மற்றெரப் பிலாததிரு வாசகத்தின் வாரிதியைக்
கற்றைச் சடையான் கருத்துருக்குங் காதலனைக்
சொற்றத் திருவாத வூரனைக்கைக் கூப்பதுமே. "

— காலிங்கப் புலவர்.

தினக்காட்சி :

தான்தான் பெரியவன் தான்தான் பெரியவன் என்று சொல்லிக் கொள்ளப் பலர் பலதுறைகளில் விழைகின்றனர். சிலர் தோல்வியுறுகின்றனர். ''பெருமையும், சிறுமையும் தான் தரவருமே'' என்ற பேருண்மையில் ''தான்தர'' என்ற சொற்கள் முக்கியமானவை. தான் என்ற ஆணவத்தை - செருக்கை தந்து விட்டால், அதாவது இழந்து விட்டால் பெருமைதானாக வந்து சேர்கிறது. செருக்கை விடாப்பிடியாக வைத்திருந்தால் தானாக வந்த பெருமை தானாகவே சிலபொழுதில் மறைந்து விடுகிறது. சிறுமையும் தானாகவே வந்து தொற்றிக் கொள்கிறது. இது இக்காலத்தில் நாட காண்கின்ற தினக்காட்சி.

ஒருவன் தன்பணிவையும், அன்பையும், உண்மையையும், இன்சொல்லையும் பிறர்பால் தந்துவிட்டால் (தான்தர) எல்லா உயிர்களுமே நன்மை செய்யத் தயங்குவதில்லை. பெருமையும் தானாக வந்து சூழ்ந்து கொள்கிறது. அதுவே அரண் போல கவசம் போல் பாதுகாவலாக விளங்குகிறது. இதுவும இக்காலத்தில் சிலரிடம் காண்கின்ற தினக்காட்சி.

கரும்பின் சாறும், வேம்பின் சாறும் :

செருக்குற்றவர் ஒருவர், செருக்கற்றவர் ஒருவர். இருவரும் ஓரிடத்தில்ஒன்று கூடிஇருந்தனர். அங்கு ஒருதங்கக்குடம் நிறையக் கரும்பின் சாறும், ஒரு பிளாஸ்டிககுவளை நிறைய வேம்பின் சாறும்

அருகருகே வைக்கப் பெற்றிருந்தன. "யார் வேண்டுமானாலும் வேண்டியதை இலவசமாக எடுத்துக் கொள்ளலாம்" என்ற விளம்பரப் பலகையும் அருகில் இருந்தது. பலர் முந்திக் கொண்டு பிளாஸ்டிக் குவளையிலுள்ள வேம்பின் சாற்றையே விரும்பி ஏற்றுக் கொண்டனர். ஏன்? அச்சமா? ஐயமா? கரும்புச் சாற்றுக்குக் காசு கேட்டு விடுவார்களோ, வேம்பின் சாற்றுக்கு அது இருக்காது என்ற வீண் மாயை கொண்டு எடுத்துக் கொண்டனர். ஆகவே ஆணவம் உள்ளவனும் அது இல்லாதவனும் மாயை மயக்கத்தால் ஒன்றுகின்றனர்.

சிவானந்தம் என்ற கரும்புச் சாற்றை நாம் அனுபவிக்கவே தனு, கரண, புவன, போகத்தை இறைவன் கருணையால் நமக்கு அளித்துள்ளான். அதனை முறையே நுகர அறியாமல் நல்வினையில்லாமல் பேரின்ப சுகத்தைப் பெறாமல் சிற்றின்ப சுகத்தையே (மாதொடு கூடி முயங்கும் மருட்சியையே) வேம்பின் சாற்றையே விரும்பியலைகிறது மனம். இம்மனக் கயிற்றை மடக்கிப் பிடித்து இழுத்து அடக்கும் திறமை நம் அறிவுக்கு உண்டு. இதனை மனிதன் ஏனோ மறந்து விடுகிறான்.

> " சென்றவிடத்தால் செலவிடாது தீதொரீஇ
> நன்றின்பால் உய்ப்பது அறிவு "

என்ற குறளையுன்னுக.

> " வையகத்தேமட வாரொடுங் கூடியென்
> மெய்யகத் தோருளம் வைத்த விதியது
> கையகத் தேகரும் பாலையின் சாறுகொள்
> மெய்யகத் தேபெறு வேம்பதுவாமே. "

என்ற திருமூலர் திருவாக்கு நமது திருவலாகிய சித்தையைத் திருத்துகிறதல்லவா!

இதனால் இல்லறத்தானைப் பெரியோர்கள் விலக்குகிறார்கள் என்று எண்ணக் கூடாது. காம இன்பத்தினைப் படிப்படியாக நீக்க வேண்டும்என்று அறிவுறுத்துவதே ஆன்றோர்களின் அருள் உள்ளம். செருக்கற்று, மனமாயையற்று விளங்கினாலும் மனம் ஒருவழிபடாமல் மாதர்மேல் மனம் நிற்கும் இந்நிலை மாற்றி நன்னிலைப்படுத்துவதே ஆன்றோர் கடன்.

வாதவூரரின் மனவளம் :

> " கருங்குழல் செவ்வாய் வெண்ணகைக் கார்மயில்
> ஒருங்கிய சாயல் நெருங்கி உள்மதர்த்து
> கச்சு அற நிமிர்ந்து கதிர்த்துமுன் பணைத்து
> எய்த்து இடைவருந்த எழுந்து புடைபரந்து

ஈர்க்கிடை போகா இளமுலை மாதர்தம்
கூர்த்த நயனக் கொள்ளையில் பிழைத்து "

நம் வாதவூர் வள்ளல். பள்ளம் உள்ள இடம் பார்த்துத்தான் நீர் வந்து பாயும். அதுபோல் பக்குவ மனவளம் தக்க பருவத்தில் வாதவூரருக்கு வந்துள்ளதால்தான் கருணைத்தேனை அவர் அகம் ததும்பப் பாய்ச்சினார். வாக்கிறந்து, அமுதம் மயிர்க்கால்தோறும் தேக்கிடச் செய்தார், திருப்பெருந்துறை தேவதேவன். இதனால் மாணிக்கவாசகர்,

" கொடியேன் ஊன்தழைக்
குரம்பை தோறும் நாய்உடல் அகத்தே
குரம்பு கொண்டு இன்தேன் பாய்ச்சினன்
நிரம்பிய (குரம்பு - நீர் பாயும் மதகு)
அற்புதமான அமுத தாரைகள்
எற்புத்துளைதோறும் ஏற்றினன், உருகுவது
உள்ளம்கொண்டு ஓர் உருச் செய்தாங்கு
எனக்கு
அள்ளூறு ஆக்கை அமைத்தனன், ஒள்ளிய
கன்னல் கனிதேர் களிறுஎன கடைமுறை
என்னையும் இருப்பது ஆக்கினன். "

என்று கருணை வான்தேன் பருகியின்புற்ற அனுபவத்தை நமக்குக் காட்டுகின்றார்.

உடல் தந்த உத்தமனை உன்னுக :

" கால்கொடுத்து இருகை சாத்திக் கழிநிறைத்து இறைச்சி [வேய்ந்து
தோல்படுத்து உதிரநீரால் சுவரெடுத்து இரண்டு வாசல்
ஏல்உடைத் தாயமைத்து ஏழுசா லேகம்பண்ணி
மால்கொடுத்து ஆவி வைத்தார்மா மறைக்காடனாரே! "

— அப்பர் தேவாரம்.

இதில், நம் உடம்பின் கால், கை, எலும்பு, நரம்பு, தோல், எருவாய், கருவாய், கண், காது, மூக்கு முதலிய உறுப்புக்களை எல்லாம் வைத்தவர். அதனுள்ளே உயிரையும், அதனூடே உலக மாயை என்பனவற்றையும் வைத்து மண்ணிற் பிறக்க வைக்கின்றான் மறைக்காட்டு மணாளன் என்கிறார் திருநாவுக்கரசர்.

இப்புனிதவுடலை நாமாக விரும்பி ஏற்கவில்லை. கடவுளால் நம்முன் வினைக்கு ஏற்பத் தரப்பெற்று நலம் பெற்றுள்ளோம் என்ற அசையாத நம்பிக்கை கொள்வதே பகுத்தறிவுள்ள மனிதனின் தலையாய கடமையாகும்.

இப்புனித உடலெடுத்த நாம் குளிக்கப்போய்ச் சேறு பூசிக் கொள்ளாத வகையில் சிந்தையைச் சிவனுக்கு ஆக்கி, வந்தனை அவன் பாதப்போதுக்கு ஆக்கி இல்லறம் நடாத்துதல் வேண்டும். இதுவே சான்றோர் அருள் வாழ்க்கை. இவர்கள் வாழ்க்கை வழியில் நாமும் வாழ்ந்தால்தான் மாயையில் மயங்குறாமல், தீமையில் சிக்குறாமல், நோயினில் நொந்திடாமல், வறுமையில் வாடிடாமல் சிறுமையில் சிதறாமல் பெருமையால் அருமையான வாழ்க்கை வாழ முடியும். இதுவே அருள் வாழ்க்கை. ஆகவே உடல் எடுத்த நாம் உடல் தந்த உத்தமனை உன்ன வேண்டும்.

யார் பெரியர்? :

தாத்தா! குனிந்துகொள் என்கிறான் பேரன். அவர் முதுகில் ஏறிக்கொள்கிறான். வேகமாகப் போ! என்கிறான். அவரால் முடிந்த அளவு மகிழ்ச்சியுடன் தவழ்கிறார். பேரன்குதிரைசவாரி செய்கிறான். சிறுவயதுடைய பேரனின் அன்பால் பெரிய வயது உடைய தாத்தா அவன் முன் தாழ்கின்றார். பேரன், தான் நினைத்த இன்பத்தை அடைகிறான். அதுகண்ட தாத்தாவும் இன்பம் அடைகிறார். முதுகில் ஏற்றிக் கொள்வது, தவழ்வது ஆகிய துன்பங்கள் இன்பமாகவே மாறுகிறது. மனமும் மகிழ்ச்சி கடலில் நிலைக்கிறது.

இதுபோல்தான் சிந்தனைக்கும் எட்டாத பரம்பொருளாகிய சிவபெருமான் தன்னடியார் பொருட்டு அடங்கி வந்து ஆவன புரிகிறான். கேளாமலேயே வேண்டியதைத் தருகின்றான். வேண்டத்தக்கது அறிபவனல்லவா? வேண்ட முழுதும் தருபவனல்லவா? காரணம், நம்மை அடிமையாக ஆண்டவனல்லவா? ஆகவேதேவரும் மூவரும் காணமுடியாத பெரியவனான சிவபெருமான் நமக்குச் சிறியவனாகவும் ஆகிவிடுகிறான். என்னே அவர் பெருங்கருணை! ஆ! ஆ!!

ஒரு ஊரில் வறுமையோடு போராடும் ஒரு ஏழை இருந்தான் அவன் சிந்தையைச்சிவனுக்கு ஆக்கிய செல்வன். அதனால்பிறரிடம் எதனையும் கேட்டுக் கையேந்த மாட்டான். உழைத்து உண்பதை உயர்வாகக் கருதுவான். முடிந்ததைப் பிறருக்குத் தருவதில் முந்தி நிற்பான். உண்மை, இன்சொல், உழைப்பு, அடக்கம், முகமலர்ச்சி இவைகள் அவனுக்குக் கவசமாக விளங்கின. காலையும் இரவும் கடவுளை மறவாது தொழுவான் துயில்வான். திருமணம் செய்து கொண்ட சில ஆண்டுகளில் அவனது ஓயாத உழைப்பாலும் பசியாலும் அவன் கண்கள் மங்கத் தொடங்கின. பத்தாண்டுகள் உருண்டோடியன. வறுமை நீங்கியபாடில்லை. மகிழ்ச்சிக்கு ஒரு பிள்ளைப் பேறும் இல்லை. கண்களை இமை காப்பது போல் இவன் மனைவி இவனைக்காத்து வந்தாள். களை எடுப்பதும், நடவு நடுவதும்,

பாத்திரம் தேய்ப்பதுமாகிய தொழில் செய்து கணவனைக்காப்பாற்றி னாள். மண் குடிசை, மழையும் வெயிலும் இவர்கள் குடிசைக்குள் அனுமதியில்லாமல் புகுந்து கொள்ளும். மனையில் ஒரு ஓரத்தில் படுத்திருக்கும் ஏழை நாள்தோறும் பரமனை நினைத்துக் கொண்டே கண்ணீர் விடுவான். காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்குபவனை நன்னெறிப்படுத்துவது நாதன் கடமையல்லவா? ஒருநாள் அவன் முன் கடவுள் வந்து நின்றார். "அன்பனே! பல வழிகளில் பல துன்பப்படுகிறாய். ஆனால் நீ ஒரே வரம் கேட்டால் தருவேன். இல்லையேல் விடைபெறுவேன். சம்மதமா?" என்றார். சிந்தித்தான் ஏழை. ஒரே வரம் தாருங்கள் சுவாமி என்றான். என்ன வரம் கேள் என்றார்.

"சொந்த வீட்டு மூன்றாவது மாடியில் எனக்குப் பிறந்த மகனை என் மடியில் வைத்து இரு கண்களாலும் கண்டு கொஞ்சி மகிழ வேண்டும்', இவ்வொரு வரம் தாரும் என்றான். அவ்வாறே வரம் தந்து மறைந்தார். மறுநாள் அவ்வூரிலேயே அவன்தான் பெரிய செல்வந்தன். அவன் வீடுதான் மூன்று மாடிக்கட்டிடம். அவனுக்கு ஒரு மைந்தன். அவனை அவ்வூரிலுள்ளோர் எல்லோரும் சிவனடி யாராக மதிக்கவில்லை. சிவனாகவே மதித்துத் துதித்தார்கள்.

நிலம், மாடிவீடு, பிள்ளைகள்யாவும் தன் நுண்ணறிவால்பெற்று விளங்கினான் ஏழை பக்தன். இப்போது சிவன் அறிவில் சிறியவர் போல் ஆனார். அடியார் அறிவில் பெரியவர் போல் ஆனார்.

வாதவூரர் நன்றிப்பெருக்கு :

நாயினும் கடையேனாகிய என்னைப் பெற்றுக்கொண்டு உன்னையே எனக்குத் தந்தீரே! இதில் சதுரர் - வல்லமை யுள்ளவர் - யார்? நீரா? நானா? யார் பெரியார்? நான் தானே வல்லமை பெற்றேன் என்று வாதவூரர் உள்ளூர மகிழ்ந்து வாழ்த்துகிறார். தன் நன்றிப் பெருக்கை நிலை நாட்டுகிறார்.

"தந்ததுஉன் தன்னைக் கொண்டது என் தன்னைச்
சங்கரா யார்கொ லோசதுரர்?
அந்தமொன்றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன்று என்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம்பெருமான்
திருப்பெருந்துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடம் கொண்டாய்
யான் இதற்குஇலன் ஓர்கைம்மாறே."

கட்டுரை எண். 20.

போதமும் சித்தியும்

டாக்டர். திரு. மு. சிவச்சந்திரன்

புராண விளக்கங்கள் :

இறைவன் உருவத்திருமேனி கொள்ளுதல் உயிர்கள் மாட்டு வைத்த கருணையினால் ஆகும் என்னும் கருத்தை ஆசிரியர் அருள்நந்தி சிவாசாரியர் தொடர்ந்து விளக்கி வருகிறார். புராணங்கள் கூறும் கருத்துக்களை மேற்கோள்களாக எடுத்துக் கூறுகிறார் ஆசிரியர்.

திருக்கயிலைமலையில் ஒருமுறை உமாதேவியார் சிவபெருமானின் திருக்கண்களைத் தம்முடைய திருக்கரங்களால் புதைத்தபொழுது, உலகமெங்கும் இருள் மூடிவிட்டது என்றும் பின்பு சிவபெருமான் தமது நெற்றிக்கண்ணால் உலகிற்கு ஒளி கொடுத்தார் என்றும் புராணங்கள் கூறும். இதனால், இறைவன், கண்களைக் கொண்ட உருவமுடையராயிருத்தல் உலகிற்கு ஒளிதருதற்பொருட்டு என்பது விளங்கும். இத்துடன், இறைவனின் அசைவின்றி, உலகில் எதுவும் நடைபெறாது என்பதும் ஈண்டுப் பெறப்படும்.

" நாயகன் கண் நயப்பால் நாயகி புதைப்ப எங்கும்
பாயிருளாகி மூடப் பரிந்துல கினுக்கு நெற்றித்
தூயநேத் திரத்தினாலே சுடரொளி கொடுத்த பண்பில்
தேயமார் ஒளிகளெல்லாம் சிவனுருத் தேசது என்னார் "

என்பது அப்பொருள் அமைந்த பாடல்.

இறைவன் சனகர்முதலிய முனிபுங்கவர்களுக்கு ஞானோபதேசம் செய்தற் பொருட்டு, யோக வடிவினராய் இருந்த பொழுது இந்த உலகம் போக நாட்டமின்றி இருந்தது என்றும் பின்னர் அப்பெருமான் உமாதேவியாரைக் கலந்து போக வடிவினராய் இருந்து உலகிற்குப்போக உணர்வினை ஊட்டினர் என்றும் புராணங்கள் கூறும். இதனால் இறைவன் யோக வடிவத்தையும், போக வடிவத்தையும் கொண்ட நிலைக்குரிய காரணமும் அங்ஙனம் இருவேறு வடிவங்கொண்டமையும் அவர் பொருட்டு அன்று என்பதும், எல்லாம் உயிர்களின் ஈடேற்றம் குறித்தே ஆகும் என்பதும் பெறப்படும்.

" கண்ணுதல் யோகிருப்பக் காமன் நின்றிட வேட்கைக்கு
விண்ணுறு தேவராதி மெலிந்தமை ஓரார்; மாருன்
எண்ணிவேள் மதனை ஏவ எரிவிழித்து இமவான்பெற்ற
பெண்ணினைப் புணர்ந்து உயிர்க்குப் பேரின்பம் அளித்தது
ஓரார் "

என்னும் பாடலால் அப்புராணக் கருத்துக்கள் விளக்கம் பெறு கின்றன.

உருவத் திருமேனியின் அவசியம் :

இதுவரை பல்வேறு காரணகாரியங்களை எடுத்துக் கூறி இறைவனின் உருவத்திருமேனிக்கு விளக்கம் கூறிவந்த ஆசிரியர், இனிவரும் இரண்டு பாடல்களால் மொத்தமாகத் தொகுத்து இத் திருமேனி விளக்கத்தை மொழிகிருர். எது எது செய்தற்பொருட்டு இறைவன் திருமேனி கொள்ளுகின்ருன் என்று கூறுகிருர். படைப்பு முதலிய ஐந்தொழில்களைச் செய்தல்பொருட்டும் அன்பர்கள் தியானபாவனை செய்தற்பொருட்டும் வேதாகமங்களின் பொருளை உணர்த்தற் பொருட்டும் உயிர்களுக்குப் போகத்தைக் கொடுத்தல் பொருட்டும் அதன்வழி பாசத்தைக் கெடுத்து முத்தியை அளித்தற் பொருட்டும் உருவத் திருமேனி கொள்ளுகின்ருன் என்கிருர்.

" படைப்பாதித் தொழிலும் பத்தர்க்குஅருளும் பாவனையும்நூலும்
இடப்பாக மாதராளோடு இயைந்து உயிர்க்கு இன்பமென்றும்
அடைப்பானும் அதுவும் முத்தி அளித்திடும் யோகும் பாசம்
துடைப்பானும் தொழிலும் மேனி தொடக்கானேல்
சொல்லொணுதே ',

என்னும் பாடல் அக்கருத்துக்களை விளக்குவது.

அடுத்து வரும் பாடலில், ஆசிரியர், இறைவன் கொள்ளும் உருவத் திருமேனி, அருவத் திருமேனி, அருவுருவத் திருமேனி என்னும் மூன்றும் நம்முடைய கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவங்கள் என்று முடிபாகக் கூறுகின்ருர்.

" உருமேனி தரித்துக் கொண்டது என்றலும் உருவிறந்த
அருமேனி அதுவும் கண்டோம் அருவுருவான போது
திருமேனி உபயம் பெற்ருேர் செப்பிய மூன்றும் நந்தம்
கருமேனி கழிக்க வந்த கருணையின் வடிவு காணே "

என்னும் பாடல் அக்கருத்தை விளக்கும் பாடலாகும்.

மாயாகாரிய வடிவம் இறைவனுக்கு இல்லை :

இனி, ஆசிரியர் வேறு ஒரு கேள்விக்கு விடை தருகின்றார். வேதாகமங்களில் அத்துவாக்கள் முதல்வனுக்கு வடிவாகும் என்று கூறுவது எங்ஙனம் பொருந்தும்? என்னும் கேள்வி அது.

வேதாகமங்களில் மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை என்னும் அத்துவாக்கள் ஆறும் முதல்வனுக்கு வடிவமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அத்துவாக்கள் மாயா காரியம். அத்துவாக்கள் இறைவனுக்கு வடிவம் எனில் மாயா காரிய வடிவம் அவனுக்கு உண்டு என்று ஆகும். அப்படியிருக்க மாயா காரிய வடிவம் இறைவனுக்கு இல்லை என்பது எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குகின்றார். இறைவனுடைய திரோதான சத்தி, அத்துவாக்களை வியாபித்துக் கலந்து நிற்றலால், அவையாகியும், பொருள் தன்மையால் அவற்றினின்று வேருகியும், அச்சத்தி அத்துவாக்களைச் செலுத்தி உடனாகியும் நிற்றலால் அத்திரோதான சத்திக்கு அவ் அத்துவாக்களோடு உள்ள சம்பந்தம் நோக்கி, அவ் அத்துவாக்கள் இறைவனுடைய வடிவம் என்று வேதாகமங்கள் கூறுகின்றன. இது உபசார வழக்குஆகும். இதனால் இறைவனுக்குச் சத்தி வடிவமேயன்றி மாயா காரிய வடிவம் இல்லை என்பது பெறப்படும்.

அத்துவாக்களுள்ளே மந்திரம் இரத்தமாகவும் பதங்கள் முடியாகவும் வன்னம் தோலாகவும் புவனம் உரோமமாகவும் தத்துவங்கள் எழுவகைத் தாதுவாகவும், கலை அவயமாகவும் கூறப்படும். இதனைக் கந்தர்கலிவெண்பா,

" மந்திரமே சோரியா வான்பதமே மாமுடியாத்
தொந்தமுறும் வன்னமே தொக்காகப் — பந்தனையால்
ஒத்தபுவனத் துருவே உரோமமாத் தத்துவங்களே
சத்ததாதுவா — வைத்த
கலையே அவயமாகக் காட்டும் அத்துவாவின்
நிலையே வடிவமா நின்றாய் "

என்று உபசாரமாகக் கூறுகிறது. இத்தகைய கருத்துவிளக்கங்களை,

" அத்துவா மூர்த்தியாக அறைகுவது என்னை என்னில்
நித்தனாய் நிறைந்தவற்றின் நீங்கிடா நிலைமையானும்
சித்துடன் அசித்திற்கெல்லாம் சேட்டிதன் ஆதலாலும்
வைத்தவாம் அத்துவாவும் வடிவென மறைகள் எல்லாம் "

என்னும் பாடல் கூறுகிறது.

(தொடரும்)

மணிக்கடலில் முகந்த சில முத்துக்கள்

வித்துவான் திருமதி. ப. நீலா, எம். ஏ., எம். ஃபில்.,
தருமபுரம்.

(மலர் 48, இதழ் 9, பக்கம் 480 இன் தொடர்ச்சி.)

ஒளியை விஞ்சிய ஒப்பனை :

காந்தர்வதத்தை யாழ்ப்போருக்குத் தயாராகிருள். தோழிப் பெண்கள் அவளைக் களிற்றின் உச்சியில் வந்த கங்கை நீரால் நீராட்டினர். சாணை பிடித்த மணியின் ஒளி கூடுவது போல மங்கையின் அழகும் விஞ்சி நின்றது.

மங்கல வாச நன்னீர் மணிநிறங் கழீஇய தொப்ப. (சிந்.623.)

நீராடியபின் துலங்கிய தூய்மைக்குச் சாணை பிடிக்கப்பட்ட மணி மிகப் பொருத்தமாக அமைந்தது சிந்தாமணியில்.

கம்பர் இந்தக் கவின்மிகு உவமையை இப்படியே ஆள்கிருர் நீர்விளையாட்டுப் படலத்தில், அகிற்குழம்பு பூசிய பெண்கள் அக் கருமை நிறம் நீங்கும்படி நீராடினர்.

பாகு அடர்ந்த பனிக்கனி வாய்ச்சியர்
வேகடம் செய் மணியென மின்னினுர். (கம். 950)

கண்களைப் பிணித்த கவின் :

பொருளின் அழகால் கண்கள் புடைபெயர்ச்சியைத் தவிர்த்து நிலைகுற்றி நிற்றலும் உண்டு. கண்ணோடு தொடுத்தது போல் நோக்குதலைக் கலித்தொகைத் தலைவி அனுபவித்துப் பேசுகிருள். அப்படிப் போலக் காந்தர் வதத்தையின் எழில் பார்த்தவர் கண்களைச் சிறைப்படுத்திவிடுகிறது. தேவர், இவள் அழகைப்பார்த்தவர்களுக்கு வீட்டுலக இன்பமும் மறந்துவிடும்.

வளஞ்சேர் துவர்ச்செவ்வாய் வாளெயிறுங்
கண்மலரும் வளையலாகாக்
களஞ்சேர் கதிர்முலையுங் கண்டார்கள்
வீட்டுலகங் காணுர் போலும் - என்ருர். (சிந். 636)

முன்பே வீட்டுலகங் கண்டவர்கள் இவற்றைக் காணுதவர்கள் என்று கொண்டு கூட்டினுல் இன்னும் இவள் அழகு ஏற்றம் பெறுமன்ருே!

கம்பர் காட்டுவதை இனிக் காண்போம். இராமன் மதிலை நோக்கி வரும்போது அவனைப் பார்த்த அரிவையர் அவன் அழகில் மயங்கினர். அவன் அழகை யாராலும் முழுமையாகக் காண முடியவில்லை. தோள்கண்டவர் அங்கிருந்து கண்களை வாங்கினால் தானே பிற உறுப்புகளைப் பார்க்க. அதுவியலாமல் சமயங்கள் தத்தமக்கு இயன்ற அளவில் பரம்பொருளைக் காண்பது போலக் கண்டனர் என்றார்.

தோள்கண்டார் தோளேகண்டார் தொடுகழல் கமலமன்ன
தாள்கண்டார் தாளேகண்டார் தடக்கை கண்டாருமஃதே
வாள்கொண்ட கண்ணார்யாரே வடிவினை முடியக்கண்டார்
ஊழ்கொண்ட சமயத்தன்னான் உருவு கண்டாரை ஒத்தார்.
(கம். 1081)

சாதிலிங்கக் குழம்பணிதல் :

இங்குலிகம் என்ற மணப்பொருளை மார்பகத்தில் பூசுதல் பண்டைய வழக்கம். குளர்ச்சி மணம் அழகு இதனால் கூடுவதுண்டு.

குலிகச் செப்பன கொம்மை வரிமுலை. (சிந். 641)

கம்பர் இதே வருணனையைச் சீதைபால் அமைத்துக் காட்டுகிறார். சீதையின் அழகைக் கண்டு மயங்கிய சூர்ப்பனகை இராவணனிடம் அதே உணர்வு மீதூரும் வண்ணம் பேசுவாள்.

ஆழித்தேர் அவள் அல்குல் கொங்கை செம்பொன்செய்
குலிகச் செப்பு
பார் அவள் பாதம் தீண்டப் பாக்கியம் படைத்தது. (கம். 3134)

என்று காமத்தூபமிடுவாள்.

மாலை ஏன் மலையாயிற்று: மலை மாலையாவதுண்டா ?

நட்புணர்வு சிறக்க முன்னதும், நட்புணர்வு இறக்க பின்னதும் அமையும் என்பதைச் சிந்தாமணியும், இராமாயணமும் காட்டுகின்றன.

யாழ்ப்போரில் வென்றவனுக்கு மணமாலை சூட்டவேண்டும் அல்லவா? தத்தை தோற்றுப் போன மனவுணர்வில் - சீவகனது ஆற்றல் கண்டு நிலைகுலைந்தும் போனதால் அவமானமும் காதலும் கால்களைப் பின்னிவிடச் செய்தன. மாலையை மலையைத் தூக்குவது போல் மிகுந்த பிரயாசையுடன் ஏந்திவந்தாள் என்பது சிந்தாமணி,

பொய்யாதோர் குன்றெடுப்பான் போல்மெலிந்து பொன்மாலை
பெய்பூங் குழலாற்குப் பெண்ணரசி யேந்தினளே. (சிந். 786)

மையார் நெடுங்கண்ணுள் மாமணியாழ் தானுடைந்து நையா - நடு நடுங்கா - தனிநாணம் மீதூரநின்றதே இதற்குக் காரணம் என்பது புலப்பட்டது.

கம்பர்-தோற்றவர் மனநிலை மாலையை மலையாகக் காண்கிறது என்றால் வென்றவர் மனநிலையில் மலைநிச்சயம் மாலையாகி விடுந் தானே - என்று எண்ணினர்.

சீதையை மணப்பதற்கு இவ்வில்லை நாணேற்ற வேண்டும் என்றான் சனகன். கன்னிமாடத்தில் கண்டு கண்வழி நெஞ்சங் கலந்தபின் விசுவாமித்திரன் நினைத்தது போல

நச்சுடை வடிக்கண் மலர் நங்கை இவள் - என்றால் இச்சிலை கிடக்க மலைஏழையும் இருளே, அறுபதினாயிரம் ஆற்றலுடையோர் திரிமடுத்து இடையிடைதண்டில் தாங்கி எடுத்துவந்த வில்லைப் பார்த்தான் இராமன். நெய்பொழிந்த ஆகுதிவழி அனல் பொங்கி நிமிர்வதுபோல எழுந்தான்.

ஆடக மால்வரை அன்னதுதன்னை
தேட அருமாமணி சீதையெனும்பொன்
சூடக வால்வளை சூட்டிட நீட்டும்
ஏடவிழ் மாலை இது என்ன எடுத்தான். (கம். 698.)

நட்புணர்வுச் சிறப்பு மலையை மாலையாக்கியதல்லவா ?

மலை உருவி மண் உருவிய வாளி :

தத்தையைச் சீவகன் யாழ்ப்போரில் வென்று பெற்றது மற்றைய வேந்தர்களுக்குக் கோபத்தை உண்டாக்கியது. தயாராக வில்லில் அம்பு தொடுத்து இருபக்க மிருந்தும் அரசர்கள் போரைச் செய்தனர். சீவகன் விடுத்த அம்பு கற்றிரள் கடந்து மண்ணுள் சுரந்து வேகம் அடங்கியது என்றார் தேவர்.

வில்வாய் வெங்கணை 'கற்றிரள் கழிந்து மண்ணுள் கரந்தது' - இது எங்கள் வில்லாற்றல் என விளம்பினன் சீவகன். (சிந். 756.)

கம்பர் தாடகை மார்பில் இராமன் விட்ட அம்பு வேகம்சிறிதும் குறையாமல் தாடகை உரம் உருவியதோடு, 'மலை உருவி மரம் உருவி மண் உருவிற்று' (கம். 662) எனக் காட்டினர்.

முன்னோர் மொழிபொருளைப் பொன்போல் போற்றும் வழி - பாராட்டற்குரியது. தேவரை அடியொற்றிக் காப்பியச் சிறப்பைக் காட்டும் கம்பர் இதற்கு எடுத்துக்காட்டாகிறார்.

(வளரும்)

ஸ்ரீ திரிபுராந்தகமூர்த்தி

வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.

தியான சுலோகம்

ரக்தாபம் பரிபூர்ண சந்த்ரவதனம்
க்ருஷ்ணம் ம்ருகம் கார்முகம்
வாமே ஸவ்யகரே சரஞ்ச
தததம் டங்கஞ்ச தேவ்யாயுதம் |
கங்காசந்த்ர கலாதரம் ஹரிவிரிஞ்சாத்யை
ஸ்ஸதா ஸேவிதம்
ஹாஸைர் தக்த புரத்யம்
த்ரிபுவனாதீசம் புராரிம் பஜே,

பொழிப்புரை :

சிவந்த நிறத்துடன் பூர்ணசந்திரன் போன்ற முகத்தை உடையவரும், இடப்பக்கம் உள்ள கைகளில் மானையும் வில்லையும் வலப்பக்கம் உள்ள கைகளில் அம்பையும், மழுவையும் ஏந்தி உள்ளவரும் கங்கையையும் சந்த்ரகலையையும் தாங்கியவரும், விஷ்ணு பிரும்மா முதலியவர்களால் எப்பொழுதும் ஸேவிக்கப்படுபவரும் சிரிப்பினாலேயே முப்புரங்களையும் எரித்தவருமான திரிபுராந்தகப் பெருமானைச் சேவிக்கின்றேன்.

விளக்கம் :

தாரகாசுரனின் மைந்தர்களாகிய தாரகாட்சன் கமலாட்சன், வித்யுன்மாலி என்னும் மூவரும் பிரமனை நோக்கிப் பெருந்தவம் புரிந்தனர். நான்முகன் அவர்கட்குக் காட்சி நல்கினார். அசுரர் மூவரும் அயனிடம் அழியாவரம் வேண்டினர். பிரமன் ஈறிலாதவன் ஈசன் ஒருவனே யாவான் ஆதலின் அவ்வரம் ஒழித்து வேறு ஏதேனும் விரும்பினால் கேளுங்கள் என்றார். அவுணர் கணங்களாய மூவரும் மூவுலங்கட்கும் சென்றுவரும் பொன், வெள்ளி, இரும்புக் கோட்டைகள் அருளவேண்டும் எனவும், அக்கோட்டைகள்

சிவபெருமான் ஒருவராலன்றி ஏனையோரால் அழித்தற்கியலாதவா திருத்தல் வேண்டும் எனவும் கேட்டனர். பிரமன் அவர்கள் வேண்டியவாறே மூன்று கோட்டைகளை அருளி மறைந்தார். அவர்கள் மூவரும் அக்கோட்டைகளைப் பெற்று மூவுலகங்களுக்கும் சென்று இடர்விளைத்து வந்தனர். தேவர்கள் திரிபுரத்து அசுரர்களின் கொடுமைகளுக்கு ஆற்றாது சிவபெருமானை நோக்கித் தவம் செய்தனர். பெருமான் அவர்களுக்குக் காட்சி அளித்து அம்மூவரும் தம் அடியவராதலின் அவர்களை அழித்தல் கூடாது என்று கூறி மறைந்தார். திருமால் புத்தவடிவு கொண்டு திரிபுராசிகளிடம் சென்று மருட்டிப் பிடக ஆகமத்தைப் போதித்து அவுணர் கூட்டத்தில் மூவரைத் தவிர ஏனையோரைப் பௌத்தராக்கினர். சிவபெருமானிடம் சென்று திரிபுரத்தசுரரை அழித்துத் தேவர்களுக்கு நல்வாழ்வு அருளவேண்டினர். சிவபெருமான், திரிபுர தகனம் செய்யத் தேர்மீது ஏறிப்புறப்பட்டார். உலகம் தேர், மந்திர மலை அச்சு, சந்திர சூரியர் சக்கரங்கள், எட்டு மலைகள் தூண்கள், நான்கு வேதங்கள் குதிரைகள், பிரமன்சாரதி, மேருவில், வாசுகி நாண், திருமால் அம்பு, அக்னி அம்புநுனி, தேவர்கள் தேரின் அங்கங்கள் - இவ்வாறமைந்த தேர்மீது ஏறினர். அச்சு முரிந்தது. பிரமன் விநாயகரை வேண்ட அச்சு முன்போலாகியது. இறைவன் தேர்மீது ஏறிச் செல்லும் போது தேவர்கள் அனைவரும் தம் துணையாலேயே திரிபுரங்களை அழிக்கும் செயல் நிகழப் போகிறது என்று எண்ணினர். அதனை உணர்ந்த சிவபெருமான் சிறியதொரு நகைசெய்தார். முப்புரங்கள்பொடியாயின. தேவர்கள் இறைவனது பேராற்றலையும் தம் அறியாமையையும் எண்ணிவருந்தினர். திரிபுர தகனத்தில் மூவர் உயிர்பிழைத்து இறைவனைச் சரணடைந்தனர். பெருமான் அவர்களில் இருவரை வாயிற்காவலராகவும் ஒருவரைக் குடமுழா முழக்கவும் அருள்புரிந்தார்.

தேவாரம்

திருச்சிற்றப்பலம்

"கல்லால் நிழற் கீழாயிடர் காவாயென வானோர்
எல்லாமொரு தேராயயன் மறை பூட்டிநின் றுய்ப்ப
வல்வாயெரி காற்றீர்க்கரி கோல் வாசுகி நாண்கல்
வில்லாவெரி யம்பாலுமை வெந்தானிடம் வீழிம் மிழலையே."

— திருஞானசம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

கலிக்கம்பர்

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம்.ஏ., பி.ஒ.எல்.
தருமபுரம்

[தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் 6—8—1989 ஆங்கிலமாத முதல் ஞாயிறன்று வழங்கிய அருளுபதேசத்தையொட்டி எழுதப்பெற்ற கட்டுரை.]

ஸ்ரீ சொக்கநாதர் பூசைமடத்தில் குருமணிகள் பூஜைநிகழ்த்திக் கொண்டிருந்தார்கள். திருவிளக்குகள் ஒளிவெள்ளமாய்க் காட்சி தந்தன. மங்கலவாத்திய ஒலியும், பூசைமடத்தின் உள்ளே ஓதுவா மூர்த்திகளின் பண்ணொலியும் விரவிப் பக்திப் பரவசம் ஊட்டிக் கொண்டிருந்தன. திரை விலகியது! தீபாராதனை ஆயிற்று. பூசை நிறைந்தது! திருவருட்பொலிவோடு குருமணிகள் திருநீற்றுப் பிரசாதம் வழங்கியருளினார்கள். பக்தியோடு வரிசையாகச் சென்று பெற்றணிந்து மகிழ்ந்தோம். நால்வர் திருத்தாள் போற்றி, 'அரகர' ஒலிமுழுங்க, குருமணிகள் பண்டாரக் கட்டிற்கு எழுந்தருளித் திருமுறைப் பாராயணமும் ஆயிற்று.

அன்பர்கள் பண்டாரக்கட்டினுள் செல்லக் குருவருள் அழைப்புக் கிடைத்தது. உள்ளேசென்று வணங்கித் திருநீறு பெற்றோம் நிம்மதியும் பெற்றோம்! அமர்ந்தோம். பண்ணிசை தொடர்ந்தது நிறைந்தது. குருவின் திருவார்த்தையால் தெளிவுபெறமாட்டோமா? என்ற ஆதங்கத்தோடு அமர்ந்திருந்த எங்கட்குக் குருவருள் கூட்டுவித்தது.

முதலில் மாதச் சிறப்புத் திருநாள்கள் பற்றித் தத்துவச் செறிவோடு விளக்கம் அருளினார்கள். தொடர்ந்து, திருத்தொண்டர் புராணவரிசையில் கலிக்கம்பநாயனார் புராணம் உபதேசித்தார்கள்.

"கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன்" என்று சுந்தரர் இந்நாயனார் வரலாற்றைச் சுருக்கமாக அருளிப்போற்றியபாங்கைச் சுட்டினார்கள். கலிக்கம்பர் வணிகர். திருப்பெண்ணாகடம் என்ற திருத்தலத்தில் அவதரித்தவர். திருப்பெண்ணாகடம் பல சிறப்புக்களை உடையது. பெண் + ஆ + கடம் என்று இத்தலப்பெயரைப் பிரித்துப் பொருள் கண்டால் தலச்சிறப்புத் தெளிவாக விளங்கும். பெண் - தேவமாதர், ஆ - காமதேனு, கடம் - யானை (ஐராவதம்)

எனப் பொருள்படும். தேவமாதரும், காமதேனுவும், ஐராவதமும் பூசித்த தலம். திருத்தூங்கானை மாடம் என்பது திருக்கோயிற்பெயர். இது யானையின் பின்பாகம்போல் அமைந்திருப்பது ஆதலால் இப் பெயர் பெற்றது. நடுநாட்டுத் தலங்களுள் நடுநாட்டின் மேற்குப் பகுதியில் அமைந்தது. இறைவன் திருப்பெயர் சுடர்க்கொழுந்தீசர் என்பது. 'ஒடுங்கும் பிணி, பிறவி, கேடு' என்று தொடங்கும் திருஞானசம்பந்தர் பதிகம் பெற்றது.

அப்பர் சுவாமிகள் சூலக்குறியும், இடபக்குறியும் இடுமாறு வேண்டிப் பெற்ற தலம். சந்தானகுரவருள் முதலாமவராகிய ஸ்ரீ மெய்கண்டார் தந்தையார் வாழ்ந்த தலம். மெய்கண்டார் அவதரித்த தலமும் இதுவே என்பர். ஸ்ரீ மறைஞானசம்பந்தரும் இங்கே அவதரித்தருளினர். இங்ஙனம் தலச் சிறப்புக்கள் பலவற்றையும் தொகுத்து உளங்கொள வழங்கினார்கள்.

அடுத்துக் கலிக்கம்பர் என்னும் சொல்பற்றிய ஆய்வுரை அருளினார்கள். கலி—என்பது உகத்தை (யுகத்தை) குறிக்கும் சொல். கம்பம் - நடுக்கம். கலியில் நடுக்கம் தீர்ப்பவர் என்பது இதன் பொருள் இஃது இறைவன் திருப்பெயர். கலிக்கம்பர் சிவபெருமான் திருவடிகளில் நீங்காப் பேரன்பு உடையவர். ஒவ்வொரு நாளும் திருத்தூங்கானை மாடத்துச் சுடர்க் கொழுந்தீசர் திருவடிகட்குத் தொண்டுபுரிபவர். இப்பற்று அன்றி உலகியல் பற்றுயாதொன்றும் இல்லாதவர்.

நாள்தோறும் அரனார் அன்பர்க்குத் திருவமுது செய்விப்பவர்; மாகேசுவர பூசையில் சிறந்தவர். அன்னம், கறிவகைகள், நெய், தயிர், பால், கனி வகைகள் முதலியன கொண்டு சிறப்பாகத் திருவமுது செய்விக்கும் நியமத்தர். திருவமுது செய்வித்த பின் அவர்கட்குத் தேவையான பிற நிதிவகைகளையும் மகிழ்வோடு அளித்திடும் மாண்பினர்.

இங்ஙனம் கலிக்கம்பர் திருத்தொண்டு செய்து வாழும் நாளில் ஒருநாள் வழக்கம்போல் தம்முடைய திருமனையில் அமுதுசெய்தற்கு எழுந்தருளிய திருத்தொண்டர்களை விதிமுறைப்படி வணங்கி வரவேற்று உபசரித்தார். விதிமுறைப்படி என்பது அடியாராய் வந்தார்தம் திருவடிகளை விளக்குதல், திருவடி விளக்கிய நீரைத் தம்முடிக்கண் தெளித்துக் கொள்ளல் முதலியன. அடியார்தம் திருவடிகளைக் கரகநீர் மனைவியார் வார்க்கக் கணவனார் கழுவி அந்நீரை இருவரும் தம் முடியில் தெளித்துக்கொள்ளவேண்டும். அடியாராய் வந்தவர்தம் வெப்பம் தணியத் திருவடிகளை நீரால் அபிஷேகித்தல், அவ்வபிஷேகநீரை, அவர்தம் திருமுடியில் தெளித்தல், ஆசமனம்செய்தல் என்பன தூய பணிகளாம். இங்ஙனம் சிறிய விளக்கங்களை அருளிப் புராண வரலாற்றைத் தொடர்ந்தார்கள்.

கலிக்கம்பர் மனைவியார், திருமனை முழுதும் விளக்கம்பெறுமாறு தூய்மை செய்வார். திருவமுது, கறியமுது, தூயநன்னீர் ஆகிய வற்றுடன் உண்ணும் மற்றைப்பொருள்களையும் சமைத்துச் செம்மை பெற அமைப்பார். கலிக்கம்பர் அடியார்களின் திருவடிமலர்களை அபிஷேகிக்கும்போது, தம்கைகளில் கரகம் ஏந்தி நீர்வார்ப்பார். இங்ஙனம் கணவனாரும் மனைவியாருமாகத் திருத்தொண்டர்கட்கு விதிப்படி உபசாரம் செய்து ஒழுகினர்.

இங்ஙனம் உபசரிக்கும் நாளில் ஒருநாள் முந்தைய நாளில் தமக்குப் பணிவிடை செய்து ஏற்றபணியை வெறுத்து வெளியேறிய ஒருவர் சிவனடியார் திருவேடத்துடன் அங்குநின்ற அடியார்களோடும் வந்திருந்தார். கலிக்கம்பர் அவருடைய திருவடிகளையும் விளக்கப்புகுந்தார். அப்போது கலிக்கம்பரின் மனைவியார் "முன்பு ஏவல் செய்யாது அகன்ற தமர் போலும்" என்று எண்ணினார். அதனால் கரகநீர் வார்க்கக் காலம் சிறிதே தாழ்த்தது.

"இவ்வடியார் முன்பு தம்மிடம் ஏவல் செய்த நிலைகருதி, வெள்கி நீர் வார்க்காது ஒழிந்தனர் போலும்" என்று கலிக்கம்பர் கருதினார். வாளை உருவினார். மனைவியார் கையில் இருந்த கரக நீரை வாங்கிக்கொண்டார். கையினைத் துணித்தார்.

பின்னர்த் தாமே கரகத்தினை எடுத்து நீர்வார்த்து அவர்தம் பாதங்களை விளக்கினார். திருவமுதுக்கு வேண்டுவனவற்றையும் தாமே செய்து துளங்காத சிந்தையுடனே அத்தொண்டரைத் திருவமுது செய்வித்தருளினார். இங்ஙனம் நியமமாக மாகேசுவர பூசைத் தொண்டு ஆற்றிச் சிவபெருமான் திருவடிநீழல் அடைந்தார். குருமணிகள் இவ்வரலாற்றின் அடிப்படையாக அமைந்த தத்துவத்தை நன்கு விளங்கும் வண்ணம் புலப்படுத்தி அன்பர்களைச் செந்நெறிச் செலுத்தி உய்யக்கொண்டருளினார்கள்.

"ஓர் அறம் செய்ய இறையருள் கூட்டுமானால் கணவன், மனைவி இருவருமாகச்சேர்ந்து அவ்வறச் செயலைச்செய்யவேண்டும். இருவராக - இணைந்த உள்ளத்தோடு ஆற்றும் தருமம் உத்தம மானது." என்ற தத்துவ அமைப்பைப் புராணவரலாறு கொண்டு விளக்கினார்கள்.

சேக்கிழார் இப்புராணம் அருளுகையில், கலிக்கம்பர், தம் மனைவியாரின் கையில் இருந்த கரகநீரை வாங்கிக் கொண்டு, பின்னர்க் கையைத்துணித்தார் என்றும் பின்னைத் திருவடிவிளக்கித் துளக்கமில் சிந்தையுடன் திருவமுது செய்வித்தார் என்றும் அருளிச் செய்தார். குருமணிகள், 'துளக்கமில்சிந்தை' பற்றிச் சீரிய விளக்கம் அருளினார்கள். துளக்கம்-மனக்கலக்கம். துளக்கம் இல்லாத சிந்தை

எப்போது தோன்றும்? "உலகில் எந்தப் பொருளும் வேண்டா. இறைத்தொண்டே தேவை" என்ற பக்குவ நிலை ஏற்பட்டால் மனக் கலக்கம் - துளக்கம் இல் சிந்தை தோன்றும். இத்தகைய துறவு மனப்பான்மை ஏற்படுமானால் - மனக்கலக்கமின்மை ஏற்படுமானால் அதன் பயன் இறையருளாதல் தெளிவு. இறைவன் துறந்தோர் உள்ளப் பெரும் பயனாக விளங்குபவன். குருமணிகள் இடையே அப்பூதி அடிகள் மூத்த திருநாவுக்கரசாகிய தம் மகனார் அரவு தீண்டி இறந்து கிடந்த போதிலும் அப்பராம் திருநாவுக்கரசரைத் துளக்கமின்றித் திருவமுது செய்ய அழைத்தார். கலங்கவேண்டிய அப்பூதியடிகள் கலங்கவில்லை; கலங்க வேண்டாத அப்பர் அப்பூதியார்க்கு நேர்ந்த நிலைகண்டு கலக்கமுற்றார். கலிக்கம்பரும் தம் மனைவியார் கையைத் துணித்து நின்ற போதிலும் துளக்கமின்றித் திருத்தொண்டரைத் திருவமுது செய்வித்தருளினார் என ஒப்பிட்டு அருளியபாங்கு மனத்தை நெகிழ்வித்தது.

இங்ஙனம் துளக்கமின்மை அடியார்கள்பால் விளங்கித்தோன்றி னமையை விதந்து ஓதியருளினார்கள். "வானம் துளங்கில் என் மண்கம்பம் ஆகில் என்" எனத்துளக்கம் என்ற சொல்லாட்சியை எடுத்துக் காட்டினார்கள். துளக்கமின்மையாம் துறவுநிலை, பலகோடி யாண்டுகள் பிறந்தும் இறந்தும் பெற்ற பயன். இத்தகு துறவுமனப் பான்மை இறையருளாலேயே கிட்டுவது. இதனை "அப்பன் நீ அம்மை நீ" என்று தொடங்கும் அப்பர் தேவாரப் பாடலில் அமைந்த "துணையாய் என் நெஞ்சம் துறப்பிப்பாய் நீ" என்னும் தொடரைச் சுட்டிச் சான்று காட்டி நிறுவினார்கள். சுந்தரர் "துளக்கம் இன்றிலரே" என அருளிய தொடரையும் துளக்கமில் சிந்தைக்கு எடுத்துக்காட்டி, இருவினை ஒப்பு மல (ஆணவம்) பரிபாகம் சத்தி நிபாதம் (இறையருள் வீழ்ச்சி) எய்தியோருக்கே துளக்கமில் சிந்தையாம் துறவு மனநிலை - துறவுநிலை எய்தப்பெறும். இறைவன் துளங்காத சிந்தையராகிய துறந்தோர் உள்ளப் பெரும் பயனாக விளங்குபவன் என அருளித் திருத்தொண்டர் புராணத்தின் வாயிலாகச் சைவ சித்தாந்தச் செந்நெறி அருளி உபதேசம் நிறைவித்தார்கள்.

பண்டாரக் கட்டிற்கு வெளியே கனிச்சாறு அலுவலக அன்பர்களின் அன்பு கலந்து இனிப்பாகக் கிடைத்தது. உயர்ந்த நினைவுகளால் பெருமித உணர்வோடு இல்லம் ஏகினோம்.

"சைவநெறி தழைத்தொண்டர் புராணவழி புகட்டிநமை
உய்விக்கும் குருமணிதாள் உணர்வோடு தொழுதிடுவோம்!"

வாழ்க குருமணிகள்!

தீர்த்தாண்ட தானபுரக் கல்வெட்டு
அஞ்சுவண்ணத் தொடர் நினைவு

வித்துவான் திரு. தா. குருசாமி

மதுரை.

முன்னுரை :

பாண்டியநாட்டின் பதினான்கு தலத்தில் ஒன்றுதிருப்புனவாயில் அத் தலப்பயணம் எமது குருஞானசம்பந்தர் பணிமன்றம் சார்பில் அன்பர்களோடு சென்றாண்டு வழிபட்ட போது - பக்கத்தில் கடலோரமுள்ள தீர்த்தாண்டதானபுரம் சிவாலயம் வழிபடும் பேறு கிட்டியது. வழியில் சுந்தரபாண்டியன் பட்டினம் தற்சமயம் எஸ். பி. பட்டினம் என்று சுருக்கி வழங்கப்படுகிறது. அவ்வூரிலும் பாழடைந்த ‡ கோயிலை வழியில்கண்டு அன்பர்களோடு சிந்திக்கும் பேறுகிட்டியது. முற்றிலும் இசுலாமியர் வாழ்கின்ற இப்பகுதியில் தீர்த்தாண்டதானபுர கோயில் மட்டும் அழிவுபடாமல் உள்ளது. தீர்த்தாண்டதானபுரம் என்றே வழங்குகின்றனர். இவ்வூர் முற்காலத்தில் கீழ்க்கடற்கரையில் வாணிகத்தின் சிறந்த துறைமுகப் பட்டினமாக இருந்தது.

கல்வெட்டுப்பார்த்தது :

திருக்கோயில் மிகப்பழமையானது. அங்கு சடையவர்மன் வீரபாண்டியன் காலத்து (கி. பி. 1269) கல்வெட்டு ஒன்றிருப்பதாகத் திரு. சதாசிவபண்டாரத்தார் எழுதிய ஆய்வை மனதில் கொண்டு - அக்கல்வெட்டுத்தொடர் வருவதை ஒத்துவைத்துப் பார்த்தேன். அதிலே வரும் தொடர் 'அஞ்சு வண்ணம்' என்ற தொடர்தான் ஆராயப்பட்டிருந்தது.

" இவ்வூரில் இருக்கிற அஞ்சுவண்ணமும் மணிக்கிராமத்தோமும்
ஆர்யவில் சாமந்தபண்டசாலையும், பட்டாரியரும் தோயாவத்திரச்
செட்டிகளும், தென்னிலங்கை வளஞ்சியரும் கைக்கோளரும்,
ஆசுவரும், வாணிகரும், நீண்டகரையாரும்கூடி,
கோயில் திருமுன்பிலே நிறைவுறக் கூடியிருந்து "

(Ins 598 of 1926)

---

‡ கோயில் பாழடைந்து - உள்ளே நுழையமுடியாதபடி மரங்களும் உள்ளன. சுவரைப்பார்த்தபோது கல்வெட்டு காணப்பட்டது; படிஎடுக்கவேண்டும்.

என்ற தீர்த்தாண்டதானபுரக் கல்வெட்டு வாசகத்தைப் பார்த்து வியப்புற்றேன். கோயிலினை மையமாக வைத்துக் கூடியிருந்த வாழ்வினை எண்ணியபோது அக்காலச் சமயப்பொறுமை மனதினைக் கவர்ந்தது.

அஞ்சுவண்ணம் ஆய்வு !

அஞ்சுவண்ணம் - அஞ்சுவண்ணத்தார் என்பது பற்றி பண்டாரத்தார் செய்த ஆய்வின்படி 'வணிகர் குழு' என அறியப்படுகிறது. இவர்களைக் கிறிஸ்துவர்களாக இருக்கலாமோ என்று எண்ணுவர். ஆனால் 'அஞ்சுவண்ணம்' என்பது 'முகமதியர்தான்' என்று கலியற்காரிகைப் பாடல் முடிவு செய்யும்படி அமைந்துள்ளதாக பேராசிரியர் திரு. வையாபுரிப்பிள்ளை கூறுகிறார்.

ஒரு பாடற் சான்று.

"இயவன ராசுந் கலுபதி தாமுதல் எண்ண வந்தோர்
அயன்மிகு தானயர் அஞ்சுவண்ணத்தவர் அஞ்சல் என்றக்
கயவர்கள் வாழ்பதி போலத் தினைப்புனங் காய்கொய்துமோம்
பயன் விளைவாம்படி பூத்தது வேங்கை பணிமொழியே"

இப்பாடலில் கலிபாவின் வழியினர் 'அஞ்சுவண்ணத்தர்' எனக் கூறப்படுகிறது. கலிபா என்பது துருக்கி வேந்தனாகிய (Caliph) காலிபைக் குறிக்கும்.

சரசுவதிமகால் பாடல் :

தஞ்சைச் சரசுவதி மகால் பாடற்றிரட்டு ஒன்றில்,

"அடிப்பரப்புடைக் கலத்து அனேக வண்ணமாக வந்து
அஞ்சுவண்ணமுந் தழைத்தறத்தின் வண்ணமானவூர்"

என்ற தொடர் வருவதை ஆய்ந்து முற்காலத்தில் வந்திறங்கிய முஸ்லீம் வணிகர் குழுவே அஞ்சுவண்ணத்தார் எனக் குறிக்கப்படுகின்றனர். இதுபற்றி ஆய்ந்து முடிவு கண்ட திரு. பண்டாரத்தார் அவர்கட்கு நன்றி கூறவேண்டும்.

முடிவுரை :

முஸ்லீம் மரபினர் அஞ்சுவண்ணத்தவர் என்று அழைக்கப்பட்டது ஏன்? எது இசுலாம்? (What is Islam?) என்ற ஆங்கில நூலில் இசுலாம் மார்க்கம் ஐம்பெருங் கொள்கைகள் உடையன என்று ஆயப்பட்டது. அவை : 1. கடவுள் ஒருவரே. 2. கடவுள்

வழிபாடு. 3. உண்ணுவிரதம் 4 ஏழைகட்குதவல். 5. மக்கா யாத்திரை இக்கொள்கை உடையவரை 'அஞ்சுவண்ணத்தவர்' என்று தமிழ் மக்கள் அழைத்திருக்கவேண்டும். அந்தநினைவோடு தீர்த்தாண்ட தானபுரத்தை நோக்கினேன். இப்பொழுதும் இசுலாமியர் நிறைய வாழ்கின்றனர் எல். பி. பட்டினம் முழுவதும் முகமதியர் வாழ்கின்றனர். கல்வெட்டுக் கூறுவது போல மேற்படியினத்தவர் கோயில் திருமுன்பிலே இன்றும் நிறைவுறக் கூடி வாழ்கின்றனர். வாழ்க! அஞ்சுவண்ணத்தவர்!

நவராத்திரி

நவராத்திரி என்பது வேனிற் காலமாகிய (வசந்தருது) சித்திரை மாதத்தில் வளர்பிறைப் பிரதமை முதல் ஒன்பது நாள் உமாதேவியைக்குறித்து விரதமிருந்து பூசிக்கும் வசந்த நவராத்திரியையும், கார்காலமாகிய (சரத்ருது) புரட்டாசி மாதத்தில் வளர்பிறைப் பிரதமைமுதல் ஒன்பதுநாள் பூசிக்கும் சாரதா நவராத்திரியையும் குறிக்கும். இந்தஒன்பது நாட்களும் பரிபூர்ணமாயும் நித்தியமாயும் ஆனால் நிர்க்குணமாயும் உள்ள சிவசக்தியை (பராசக்தியை) சகுணமாகப் பலவித சக்தி வடிவங்களில் வழிபடுவதற்கு மிகச் சிறந்த நாட்களாகும் இந்நாட்களில் தேவியைப் பூசிக்கவேண்டிய அவசியத்தை அறிதல் நல்லது. வசந்தருது சரத்ருதுவாகிய இரண்டுருதுக்களும் யமனுடைய இரண்டு கோரைப் பற்களுக்குச் சமமாக உள்ளவை. அவ்விரண்டினுள் வசந்தருதுவில் வெப்பமிகுதியால் அம்மை முதலிய நோய்களும், சரத்ருதுவில் தட்பமிகுதியால் காலரா முதலிய நோய்களும்பெருகி மக்களைத் துன்புறுத்துவதால் அவற்றினின்றும் விடுதலைபெற உலக மாதாவாகிய உமாதேவியை விரதமிருந்து பூசித்தல் வேண்டும். புரட்டாசி மாதத்தில் நவராத்திரியைப் பத்து நாட்கள் கொண்டாடுவதால் தசராத்திரி என்றும், தசரா என்றும் வழங்குவர். இஃது அன்றிப் பொதுவாக அம்பிகையைப் பூசித்தற்குரியதினங்கள் மங்களவாரம், சுக்கிர வாரம், சப்தமி, அஷ்டமி, நவமி, கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி, பிரதோஷம்முதலியனவாம். சர்வேசுவரனுடையசக்தி, காளிதேவி வடிவில்தோன்றி,சிவத்துவேஷியானதக்ஷனின்வேள்வியை அஷ்டமியன்று அழித்தமையால் அந்நாள் தேவியை வழிபடுவதற்கு மிகச் சிறப்புடைய நாளாகக் கூறப்பட்டிருக்கிறது. தேவியை இராவண ஜயத்துக்காக வழிபட்ட இராமபிரானுக்கு அஷ்டமியன்றே காட்சியளித்ததாகத் தேவி மகாத்மியத்தில் உள்ளது.

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாளில் தேவார வைப்புத் தலங்களில் சிறப்பு வழிபாடுகள் நிகழ்த்துவிக்கப் பெறுகின்றன. சுக்கில - ஆவணி - ஆயில்ய வழிபாடு 29—8—89 செவ்வாய் அன்று திரைலோக்கி (ஏமநல்லூர்) அருள்மிகு சுந்தரேசுவரர் திருக்கோயிலில் சிறப்பு வழிபாடு நடைபெற்றது. அப்பர் சுவாமிகளால் வைப்புத் தலமாக அருளிச் செய்யப் பெற்றது இத்தலம். கருவூர்த் தேவர் அருளிய திருவிசைப்பாப் பதிகம் இத்தலத்திற்கு உண்டு. தலச் சிறப்புக்களை விளக்கித் தருமை ஆதீனப் புலவர் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ., விரிவுரையாற்றினார். அன்பர்கள் வழிபாடு ஆற்றிப் பயன் பெற்றனர்.

குருவருளும் அருளுபதேசமும்

தருமை ஆதீனத் திருமடத்தில் ஆங்கில மாத முதல் ஞாயிற்றுக் கிழமை தோறும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை அன்பர்கள் வழிபட்டு அருளுபதேசம் பெறும் பிரார்த்தனைத் திருக்கூட்டம் நிகழ்ந்து வருகின்றது. இம்மாதம் 98 ஆவது அருளுபதேசம் 3—9—89 அன்று திருமுறைப் பாராயணத்துடன் தொடங்கிச் சிறப்பாக நடைபெற்றது.

ஸ்ரீலஸ்ரீ குருமணிகள் திருத்தொண்டர் புராணத்தின் வாயிலாகச் சைவ சித்தாந்த நெறிவிளக்கம் அருள்கின்றார்கள். இம்மாதம் கலிய நாயனார் புராண உபதேசம் நடைபெற்றது. தமக்கு அமைந்த தொழிலின் வாயிலாக - தம் குலத்திற்கேற்ற தொண்டினை - நியமமாக வறுமையுற்ற காலத்தும் செய்தல் என்னும் உயரிய நெறி அடியார்களால் அமைந்திருந்தமையைச் சுட்டி விளக்கம் அருளினார்கள். ஆதீன அடியார்கள், அன்பர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு பயன் பெற்றனர். அடுத்து 99 ஆவது அருளுபதேசம் 1—10—89 அன்றும் 100 ஆவது அருளுபதேசம் 5—11—89 அன்றும் நடைபெற உள்ளன. அன்பர்கள் கலந்து கொண்டு பயன்பெறுவார்களாக.

தருமை ஆதீனத்தில் ஆவணிமூலப் பெருவிழா பட்டமளிப்பு விழா

தருமை ஆதீனம் ஸ்ரீ சொக்கநாதர் பூசை மடத்தில் ஆவணி மூலப் பெருவிழா ஆண்டுதோறும் கொண்டாடப் பெறுகின்றது. இவ்வாண்டு 2—9—89 சனிக்கிழமை தொடங்கி 11—9—89 திங்கட்கிழமை வரை பத்து நாட்கள் பெருவிழா நடைபெற்றது. நாள் தோறும் காலை 10 மணி அளவில் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தில் ஸ்ரீ சொக்கநாதப் பெருமானுக்குச் சிறப்பு வழிபாடு நிகழ்த்தியருளினார்கள். பத்து நாட்களிலும் மாலை 6 மணி முதல் பூசை மடத்தில் திருவிளையாடற் புராணத் தொடர் விரிவுரை நிகழ்த்துவிக்கப் பெற்றது. தருமை ஆதீனத்தில் 7—9—89, 8—9—89, 9—9—89 ஆகிய மூன்று நாட்களிலும் ஆவணிமூலப் பெருவிழாவும் தருமை ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டு விழாவும் மிகச்சிறப்பாக நடைபெற்றன.

9—9—89 சனிக்கிழமை ஆவணி மூலத் திருநாளன்று ஸ்ரீ சொக்கநாதருக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நிகழ்ந்தன. 'ஸ்ரீ சொக்கநாதசுவாமி திருவருட்பா' என்ற நூல் விழா மலராக வெளியிடப் பெற்றது.

இந்நாளில் ஆண்டுதோறும் அறிஞர் ஒருவருக்குப்பட்டமளித்து ஆசிவழங்குவது வழக்கம். இதுவரை 39 அறிஞர்கள் பட்டமளித்து ஆசிவழங்கப் பெற்றுள்ளனர். இவ்வாண்டு ஸ்ரீ சொக்கநாதர் பூசை மடத்தில் மாலை வழிபாட்டின் போது தருமை ஆதீனத்தில் 64 ஆண்டுகள் சீரிய முறையில் பணியாற்றிய முன்னாள் தலைமைக் கண்காணிப்பாளர் திரு. B. முத்துக்குமாரசாமி முதலியார் அவர்கட்கு இண்டை மாலை சூட்டி பொன்னாடை போர்த்தி 'ஆட்சிக்கலை வல்லுநர்' என்ற பட்டம் பொறித்த பொற்பதக்கம் வழங்கி அருளினார்கள். மாலை வழிபாடு கற்கண்டுப் பொங்கற் பாவாடை நிவேதனத்துடன் சிறப்பாக நடைபெற்றது.

ஆவணிமூலப் பெருவிழாவை யொட்டித் தருமை ஆதீனக் கல்வி நிலையங்களின் ஆண்டுவிழா 3 நாட்கள் ஆதீனத் திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் நடைபெற்றது. ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி, ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளி ஆண்டு விழா 7—9—89 வியாழனன்று பெரிய புராணத் திருநாளாகக் கொண்டாடப் பெற்றது. தேவாரப் பாடசாலை, வேத சிவாகமப் பாடசாலை ஆண்டு விழா 8—9—89 வெள்ளியன்று கந்தபுராணத் திருநாளாகக் கொண்டாடப் பெற்றது இவ்விரு நாட்களிலும் தருமபுரம் ஆதீனம் கலைக்கல்லூரி ஆசிரியர்கள் விரிவுரை நிகழ்த்தினர். தருமபுரம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக்கப்பள்ளி மற்றும்

உயர்நிலைப்பள்ளி மாணவ, மாணவியரின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

தருமபுரம் ஆதீனக் கலைக் கல்லூரி, மற்றும் அனைத்துலக சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவன ஆண்டுவிழா 9—9—89 சனிக்கிழமை மாலை 7 மணிக்குத் திருவிளையாடல் புராணத் திருநாளாகக் கொண்டாடப் பெற்றது. இறை வணக்கத்தின் பின் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் ஆசியுரை வழங்கி கல்வி நிலையங்களின், மாணவ மாணவியர்க்குப் பரிசுகள் வழங்கியருளினார்கள். ஆட்சிக் கலைவல்லுநர் திரு. B. முத்துக்குமாரசாமி முதலியார், தம்பால் கருணை கூர்ந்து பட்டம் வழங்கிச் சிறப்பித்தமையை நன்றி கூர்ந்து திருவடிமலர்களைப் போற்றி ஏற்புரை வழங்கினார். காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் பாராட்டுரை வழங்கினார்கள். டாக்டர். திரு. இரா.செல்வக்கணபதி ‘மண் சுமந்த திருவிளையாடல்’ பற்றிச் சிறப்புரை ஆற்றினார். இறை வாழ்த்துடன் விழா நிறைவுற்றது.

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் ஸ்ரீ சொக்கநாதருக்கு நிவேதித்த கற்கண்டுச் சர்க்கரைப் பொங்கல் பிரசாதத்தை அன்பர்கள், ஆசிரியர்கள், அலுவலர்கள் மாணவர்கள் ஆகியோர்க்கு வழங்கி ஆசீர்வதித்தார்கள்

ஸ்ரீ மறைஞானசம்பந்தர் குருபூஜை விழா

புறச்சந்தான குரவருள் மூன்றாமவராகிய ஸ்ரீ மறைஞான சம்பந்தர் குருபூஜை விழா ஆவணி உத்திர நாள் கூடிய 2—9—89 சனிக்கிழமையன்று தருமபுரம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலிலும் சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயிலிலும் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகளுடன் சிறப்பாக நடைபெற்றது. தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் தருமை ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலுக்குக் காலை மாலை ஆகிய இருவேளைகளிலும் எழுந்தருளி வழிபாடு ஆற்றினார்கள். மாலை 7 மணி அளவில் தருமையில் வித்துவான் திரு. கா. ம; கண்ணப்பன் எம்.ஏ., பி. எட்., ஸ்ரீ மறைஞானசம்பந்தர் அருள் வரலாறு பற்றி விரிவுரை ஆற்றினார்

சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயிலில், ஸ்ரீ சமயாசாரியர் சந்தானாசாரியர் சந்நிதியில் திருமுறைக்கலாநிதி திரு. எம். கனகசபை பிள்ளை திருமுறைப் பண்ணிசையுடன் குருபூஜை விழா விரிவுரை நிகழ்ச்சி தொடங்கப் பெற்றது. பிரம்மஸ்ரீ டாக்டர் ஐ. ஆனந்த நடராஜ தீட்சிதர் தலைமையேற்று மறைஞானசம்பந்தர் அருள்வரலாறு பற்றி உரை நிகழ்த்தினார். தருமையிலும், சிதம்பரத்திலும் அன்பர்கள் விழாவிற் கலந்து கொண்டு தரிசித்தும், சொற்பொழிவுகள் கேட்டும் பயன்பெற்றனர்.

✻ எதிர்காலம் ✻

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஓய்வுபெற்ற ஆசிரியர்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்

(சுக்கிலஹூ புரட்டாசிமீ 1உ முதல் 31உ முடிய)

(17—9—89 முதல் 16—10—89 முடிய)

சுக்கிலஹூ ஆவணிமீ 31உ ஸ்திரவாரம் ரேவதி நக்ஷத்திரம் கரசை கரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 58 நாழிகை 55 வினடிக்கு சிம்ம லக்கினத்தில் ஸ்ரீ யோக ரட்சகரான ஸ்ரீ சூரிய பகவான் லோக பிரஜைகள் வித்தகம் சகலகலா ஞானங்களில் உயர்வுறும் பொருட்டு சிம்ம ராசியிலிருந்து கன்னியா ராசி சங்கிரமணமாக புரட்டாசி மாதப் பிரவேசம் செய்தருள்கின்றுர். மறுதினம் பானுவாரம் புரட்டாசி மாதம் முதல் தேதியாகும். அன்று ஷடசீதி புண்ணியகாலம். ஸ்ரீ புதபகவான் புரட்டாசி மீ 17உ பகலில் தனது உச்சஸ்தானமான கன்னியா ராசியில் பிரவேசித்து சரஸ்வதித்வ ஞானசேகரமாக பிரஜைகளுக்கு பிரகாசபுத்துணர்வு அறிவுவளர்ச்சி செயல் ஆற்றல்களுக்கு கர்த்தாவாகி மிளிர்பவராவார், சங்கிரமண காலகிரக விதிதியின் பலனுவது உலகில் வளம்மிகும். கலைமகள் கடாக்ஷத்தில் கலைஞர்களின் சங்கீதம், நடனம், சித்திரம், சிற்ப வடிப்பு ஆகிய கலைகள் பழமையினின்றும் புதுமையில் கால தேச முற்போக்கில்மிளிரும். விஞ்ஞானிகள் கலாவிற்பன்னர்கள் புதுமைப் பொருள் படைத்து உலகுக்கு அளிப்பர். உலகில் அரசர்கள் ஜனுதிபதிகள் பிரஜைகளின் உயர்வாழ்வுக்கும் நாடுகளின் பொருளாதாரத்துக்கும் திட்டங்கள் வகுத்து நெறிபடுத்துவர். உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் பரமாசாரிய சுவாமிகளாக வந்து ஞானமார்க்கத்தில் பிரஜைகளுக்கு உபதேசம் செய்து வருகின்ற சிவஞானகுருமகான் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்கள் ஜெகத்குரு மகான்கள் உலகத்துக்கு சிவசமயத்தின் தூய்மை வேதம், தத்துவம், சாஸ்திரம் இவை வழி வழி அனுஷ்டித்து வருவோரினின்றும் எல்லா மக்களும் கற்றுயர, பாடசாலைகள் அமைத்தும், நூல் புதுப்பித்தும் எல்லோரும் நல்வழியில் திகழும் பொருட்டு ஈஸ்வர கட்டளை நிறைவு செய்வார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் சிறப்பொடு பூசனைகள், சக்தி பூசைகள் நடக்கும். ஆங்காங்கு சிவபக்தர்களின் திருச்சபை கூடி தெய்வ சிந்தனை சொற்பொழிவுஆற்றுவர். ஆலயங்களில் கூட்டுபிரார்த்தனைகள் வேத வேள்விகள் நடந்து நாடுகளில் சுபிட்சம் ஏற்படும்.

1. மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் பெருமதிப்பில் வந்து நிறையும். வித்தியா வியாபாராதிகளில் கலைத்துறையில் அக்டோபர் 3 தேதி முதல் நல்லசெயல் முறைகளை கடைபிடிக்கும். அரசாங்கத்திலிருந்து நற்செய்தி வரும். பூமி இயந்திர சாதனங்களில் அபிவிருத்தி ஏற்படும். எல்லாக்காரியங்களும் வெற்றிகரமாக நடக்கும். வாகன சுகம் திருப்தியளிக்கும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். அக்டோபர் 4, 5 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி - மிருகசீரிஷம் ½

ரிஷப ராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பணவருமானம் மதிப்பாக வரும். வித்துவத்துவம் கலைத்துறையில் நன்மதிப்பு வெகுமதி வருதல் ஆகும். முன்பிருந்த சுற்றத்தாரின் மனஸ்தாபம் நீங்கி அனுசரணை உபசரிப்பு நல்லோரிடம் அனைவராவல் ஆகிய வற்றில் அமைதி தரும். நவீன பொருள் பிராப்தி ஒன்று வந்து சேரும். தாரம் புத்திரர்களுக்கு சௌக்கிய பலன் தரும். எல்லாக் காரியங்களையும் சமயோசித புத்தியில் நன்முறையில் நடத்தும். அக்டோபர் 6, 7, 8 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

3. மிதுனம் :- மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுன ராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பணவருமானம் சரளமாக வந்துகொண்டிருக்கும். வித்துவத்துவம் கலைத்துறையில் செய்தொழில் உத்தியோகத்தில் அக்டோபர் 3 தேதி அளவில் ஓர் உயர்வளிக்கும். உற்றார் உறவினர் அன்பர்கள் மிச்சிரமாக இருந்து கொள்வர். நவீன இயந்திர சாதனம் அனுபோக பிராப்தியாகும். எல்லாக் காரியங்களும் புத்தி மேம்பாட்டில் சுறுசுறுப்பாக நடக்கும். தாரம் புத்திரர்களின் நலம் நன்றாக இருந்து வரும். அக்டோபர் 9, 10 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

கடக ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் அதிகம் தரும். செய்யும். வித்துவத்துவம் கலைத் துறையில் சிறப்பு தரும். கலாஞானங்களில் அரங்கேற்று சம்பவம் நிகழும். பசுபால் பிராப்தியளிக்கும். அக்டோபர் 3 தேதி அளவில் அரசாங்கத்திலிருந்து நற்செய்தி வரும். எல்லாக்காரியங்களும் ஜெயபிராப்தியாக நடக்கும். புத்திரருக்கு உயர் ஸ்திதியாகும். தாம்பத்திய வாழ்க்கை சாஸ்திரோக்த தானதருமங்களுடன் நடந்துவரும். அக்டோபர் 11, 12 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் வரும். பூஷணங்களின் பிராப்தியளிக்கும். வித்தியா விவசாயாதி கலைத்துறையில் உயர் ஸ்திதி ஏற்படுத்தும். உறுதி வாக்களித்தல் நிறைவு செய்தல் ஆகும். அக்டோபர் 3 தேதியிலிருந்து இவற்றில் பூரண சித்தியை உண்டுபண்ணும் வாகன சுகம் திருப்தி அளிக்கும். புத்திரர் பௌத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்து வரும். எல்லாக் காரியங்களும் மனோபிலாஷைக்கு ஏற்ப சிறப்பாக நடந்துகொண்டிருக்கும். அக்டோபர் 13, 14 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய், புதன் சுபம்.

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

கன்னியா ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் வந்துகொண்டிருக்கும். சுப விசேஷ செலவினமும் ஆகும். அக்டோபரில் அரசு விஷயங்கள் வந்து நன்மை தரும். வீடு வாகன பிராப்தியில் சௌகரியம் தரும். புத்திரருக்கு உயர்வளிக்கும். தாம்பத்திய வாழ்க்கை தெய்வ பக்தியில் நல்லவிதமாக நடந்து கொண்டிருக்கும். செப்டம்பர் 18, 19, அக்டோபர் 15, 16 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் நற்பலன் தரும். பணவருமானம் வெகுவாக வரும். உடன் அவசிய செலினங்களையும் ஏற்படுத்தும். அக்டோபர் 4 தேதிக்கு எதிர்பாராத ஓர் பொருள் கைக்கு வரும். எல்லாக் காரியங்களும் இஷ்டசித்தியில் நன்றாக நடந்துவரும். ஓர் இயந்திரசாதனம் தரும். தாரம் புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். செப்டம்பர் 20, 21 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை

விருச்சிக ராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பண வருமானம் மூன்று வகையில் வரவாகும். வித்துவத்துவம் கலைத்துறையில் பிரசித்தமும் அரசு நன்மைகளும் ஏற்படும். ஓர் பொதுஸ்தலத்துக்கு நிர்வாக பொறுப்பு ஏற்கும். எல்லாக் காரியங்களும் தெய்வ பலனால் சிறப்பாக நடந்துகொண்டிருக்கும் தாரம் புத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். செப்டம்பர் 22, 23 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

தனுர் ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் வெகுவாக வரும். வித்துவத்துவம் கலைத்துறையில் உத்தியோகம் தொழில் களில் அக்டோபர் 3தேதி ஆனுல் நற்பலனும் பதவி உயர்வும் அளிக்கும். நவீன இயந்திர சாதனம் ஒன்று கையாளுதல் ஆகும். புத்திரர் பௌத்திரர்களுக்கு மேன்மை ஸ்திதி ஏற்படுத்தும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும். செப்டம்பர் 24, 25, 26 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

10. மகரம் :- உத்திராடம் $\frac{3}{4}$ - திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$

மகரராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் வந்துகொண்டிருக்கும். வித்துவத்துவம் கலைத்துறையில் செய்தொழில் உத்தியோகத்தில்சிறப்பு பலனைஉண்டுபண்ணும். அக்டோபர் 4 தேதி ஆனல் அதிர்ஷடவச பொருள் வரவாகும். தெய்வ தரிசனம் நல்லவர் சந்திப்பு மனத்தெளிவை ஏற்படுத்தும். அனைத்து எதிர்ப்புகளும் நீங்கும். தாரம்புத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். அக்டோபர் 27, 28 தேதிகள்சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

11. கும்பம் :- அவிட்டம் $\frac{1}{2}$ - சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$

கும்ப ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். வருமானம் தரும். நல்ல பூஷணம் தரும். வித்துவத்துவம் கலைத் துறையில் அக்டோபர் 3 தேதி ஆனல் பிரயோசன சித்தியாகும். அரசு விகிதங்களில் நல்லன ஏற்பட்டுவரும். ஐதீக சாஸ்திரோக்த காரியங்களை புனிதமாக நடத்திவரும். தாரம் புத்திரர்களின் நலம் நன்ருகஇருந்துவரும். செப்டம்பர் 29, 30 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

12. மீனம் :- பூரட்டாதி $\frac{1}{4}$ - உத்திரட்டாதி - ரேவதி.

மீன ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் தரும். வித்துவத்துவம் கலைத்துறையில் சிறப்பு பலனை உண்டுபண்ணும். அக்டோபர் 3 தேதிக்கு மேல் இயந்திரம் நவீன சாதனம் கையாளுதல் ஆகும். எல்லா வகையிலும் சீரான அனுபோகமாகவே இருந்துவரும். மனைவியின் இரத்தாதிக்க நலிவு வைத்தியத்தில் குணமாகும். எல்லாவற்றிலும் தெய்வபலம் இருந்து காக்கும். அக்டோபர் 2, 3 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

அனைத்துலக சைவசித்தாந்த
ஆராய்ச்சி நிறுவனம்

இதழ்வழிச் சைவ சமயக்கல்வி-V

பாடம் - 8.

ஸ்ரீமஸ்ரீசிவஞான தேசிகரின்
திருவருட்பாத் திரட்டுச் சிந்தனை :

பண்டார சாத்திரங்கள் :

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி திருவருட்பா

திரு. தி. ந. இராமச்சந்திரன், பி. காம்., பி. எல்.,
தஞ்சாவூர்.

தருமபுர ஆதீனத்துப் பத்தாவது குருமகாசந்நிதானமாக எழுந்தருளி அருள் செங்கோல் ஓச்சிய ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக பரமாசாரிய சுவாமிகள் அருளிய நூல் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி திருவருட்பா. தருமை ஆதீன வெளியீடு எண் 423இல், இது பதின்மூன்றும் நூலாக அச்சாகியுள்ளது.

தக்ஷிணாமூர்த்தியைத் தமிழில் தென்முகக் கடவுள் என்பர். சிவனார் குருவாக எழுந்தருளிய அற்புதக் கோலமிது.

"பேரனந் தம்பேசி மறையனந் தஞ்சொலும்
பெரியமௌ னத்தில்"

வைப்பாகும் கோலம் இக்கோலம். பேசரும் அனந்தபத ஞான ஆனந்தம். சித்தாந்த அத்துவிதத்தின் கடவுட்கோலம். இவ்வடிவை, "சொற்பிரகாசத்தனி" என்று போற்றுவார் தாயுமானவசுவாமிகள். சித்தம் அறியாதபடி சித்தத்தில் நின்றிலகு திவ்யதேஜோ மயமிது. வாக்கிறந்த பூரணம். எல்லமாய் அல்லதுமாய் உள்ள அனிர்வசநீய நிலை.

"சநகர்முதலிய முனிவர்க்கு உண்மை உபதேசிக்க எழுந்தருளிய சிவமூர்த்தியின் திருவுரு, இந்தத் தக்ஷிணாமூர்த்தம், யோக தக்ஷிணாமூர்த்தம், வீணா தக்ஷிணாமூர்த்தம் எனப்படும்" என்று அபிதான சிந்தாமணி கூறுகிறது.

"யஸ்யைவ ஸ்புரணம் ஸதாத்மக மஸத் கல்பார்த்தகம் பாஸதே
ஸாக்ஷாத் தத்வமஸீதி வேதவசஸா யோ போதயத்யாச்ரிதாந்
யத்ஸாக்ஷாத் கரணாத் பவேந்த புநரா வருத்திர் பவாம்போ
[நிதௌ
தஸ்மை ஸ்ரீகுரு மூர்த்தயேநம இதம் ஸ்ரீ தக்ஷிணா மூர்த்தயே"

இப்படி ஸ்ரீமத் ஆதிசங்கர பகவத்பாதர், தம்முடைய ஸ்ரீ தக்ஷிணா மூர்த்தி அஷ்டகத்தில், ஆலமர் செல்வரைப் போற்றுகிறார். இப் பாடலின் பொருள் :-

"எந்த மெய்ப்பொருளின் ஒளி எப்பொருள்களிலும்
இயைந்தே விளங்க லுறுமோ
எந்த மெய்ப்பொருள் சரண் அடைந்தவர்க்கு "அது நீ"
என்றினிய உபதேசம் அருண்மோ
எந்த மெய்ப்பொருள் தனைக் கண்டவர்க்குப் பிறவி
இனியில்லை யாகுமோ அச்
சிந்தையுறு குருமூர்த்தி ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி
திருவடிகள் போற்றி, போற்றி."

(மொழிபெயர்ப்பு: கவியரசு கு. நடேச கவுண்டர்)

ஞான உருவமே தக்ஷிணாமூர்த்தம். ஆதலால் சிவஞானபோதம் வளர வந்த மெய்கண்டதேவர், கல்லால் நிழல் அமர்ந்த மலை வில்லாரைப் போற்றுகிறார். இரண்டாம் திருமுறையில், இந்தளப் பண்ணில்அமைந்த திருநாகேச்சரப் பதிகத்தில்தக்ஷிணாமூர்த்தியை "கல்லால் நிழல் மேயவனே" என்று பரவுகிறார் திருஞான சம்பந்தப் பெருமான்.

ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி திருவருட்பா எம்பிறையின் அடையாளங் களை நாம் உய்ய எடுத்து இயம்புகின்றது.

கமலமுகம், கருணை மொழியும் திருவிழி, புன்முறுவல் பூந்தலர்ந்த பூங்குமுதச் செவ்விதழ், ஒளிரும் கற்றைச் சடை, அதன் மீது பிஞ்சு மதி, திருக்காதில் குழை, சின்மய ஆகாயத்தைப் பரமானந்தம் என்று காட்டி, சித்தி, முத்தி, பத்திகள் அருளும் சின் முத்திரை, சிவானுபவம் சேர்க்கும் செபமாலை, திருக்கரத்தில் சிவஞான போதம், புடை சூழ்ந்த புலியதள், கோடிக்குளிர் மதிகளின் கொள்ளை வண்ணம்,

"மேலான தெய்வம் நாம் அன்றிவே றில்லைஇது
மெய்யென்று எடுத்த கனல்"

வடவாலமரநிழலில் உறைவு - இவையே ஸ்ரீலஸ்ரீ தேசிகர் நமக்கு உணர்த்தும் தெய்வ அடையாளங்கள்.

முதல் பாடல் மூலம், சொக்கழகுத் திருவுருத்தை நம் உள்ளத்தில் உயிரோவியமாகத் தீட்டி விடுகின்றார் நம் தேசிகர். உணர்ந்து ஓதுவார் உள்ளத்தில் இத்திருவுருவம் தெய்வப் பிரதிஷ்டை கொள்ளும்.

" எக்காலம் இக்காயம் இற்றிடுமோ என்வினைகள்
எக்காலம் மும்மலங்கள் இற்றிடுமோ — எக்காலம்
ஆனந்த சாகரத்தில் ஆடிடுமோ என்னுளந்தான்
ஆனந்தா சொக்கநா தா "

என்று குருஞானசம்பந்தர் அருளிய விண்ணப்பத்தில் ஊறித் திளைத்த பரமாசாரிய தேசிகர், காயத்திற்கு மூலகாரணமாகவுள்ள சகமாயை, அன்றன்றும் அலைக்கழிக்கும் மும்மலக் கொடுமை, இவையிற்றிலிருந்து சுய முயற்சியால் விடுதலை பெற முடியாத நிலை ஆகியவற்றைப் பற்றி பாடல் இரண்டில் இங்ஙனம் அருளுகின்றார்.

'' சீராரும் நின்சரண தேஜோமயா நந்த/
தெரிசனங் காட்டுபகலே
தேகாதியாகும் ப்ர பஞ்ச இருளா[illegible] !
திண்டாடும் மும்மலப்பேய்
போராடுது என்னுடன்; நான் ஏலேன் அதனுடன்
போராட முடிவதில்லை;
புலையாடல் ஒருநாள் இரண்டு நாளோ [illegible]
பொறுக்கவும் படுவதில்லை;
ஆரோடுசொல்லி யென் குறைஆறுவேன்? எனக்கு
அன்னையே அப்பனே உன்
ஆறுதலையன்றிவே றில்லை நீநழுவ விடின்
அடியேன் அலைந்து போவேன்
ஓராலின் நீழலில் உறைந்து சநகாதியர்க்கு
உள்ளபடி அருள் தெய்வமே
ஒன்றாகி ஆனந்த உருவாகி என்னுயிர்க்கு
உயிரான பரம சிவமே. ''

எல்லை பிரிவற்றதுவாய், யாதெனுமோர் பற்றிலதாய், அசைவிலாப் பூரணமாய் உள்ள சிவம், உயிர்களோடு கலப்பினால் ஒன்றாய், பொருட்டன்மையால் வேறாய், உயிர்க்கு உயிராம் தன்மையால் உடனாய் ஓர் சம்பந்தம்கொள்ளும்போது பதியாகிறது. இவ்வுறவே அத்துவிதம் என்று சுட்டப்படும். இச் சைவ சித்தாந்தக் கருத்தை, "ஒன்றா" என்றும், ''ஓராலின் நீழலில் உறைந்து'' என்றும், ''உயிர்க்கு உயிரான'' என்றும், எடுத்துச் சொல்லி,

நமக்கு நம் தேசிகர் இரண்டாம் பாடலில் அருளியுள்ளதை உன்னித்து உணரல் நம் கடமை.

இறைவனின் பேரொளியின் முன்னர்ப்பலகோடி சூரியர்களின், சம்மேளித்த ஒளி வல்லிருளாகவே இருக்கும். இறைவனின் தண்ணளிச் சீதளத்தின் முன்னர் எண்ணிலா மதிக் கூட்டங்களின் தன்மை வடவாக்நியாகவே இருக்கும். அரி, அயன், இந்திரன் ஆகியோர் பெற்றுள்ளசெல்வம், ஆலமர்செல்வனின் ஐஸ்வர்யத்தின் முன்னர் தனிசால நல்குரவாகவே இருக்கும். கோடான கோடி அண்டங்கள் எல்லாம், பென்னம் பெரிய மேருமலையாக உள்ள இறைவன் முன்னர், ஒரு சிறு அணுவாக இருக்கும். இறைவாகிய அமுதத்தின் முன்னர், வானோர் உண்ணும் அமுதம் வேம்பே. மஹாத்தான பிரம பிரளயம் என்பது, அருட்டிரை வீசு மகோன்னத சலராசியான இறைவன் முன்னர் ஒரு சிறு துளியே. மானவே பிறக்கும் பிற தெய்வங்கள் போல் அல்லாமல், சிவனார் என்ற முன்ன பரம்பொருள். ஆநாதி முத்தர் சிவனார்; பேர் அறிவின் உருவத்தர். இவையிற்றைத் தக்ஷிணாமூர்த்தி உணர்த்த உயிர்களாகிய சநகாதியர் உணர்ந்தனர். இச்செய்திகள் எல்லாம் பாடல் மூன்றில் அருளப்பட்டுள்ளன.

"சந்த்ரசேகர சகள நிட்கள தயாபர
சதர்சிவ சிதாகாயமாம்
சபாநாத சுந்தரானந்த கல்யாண குண
சர்வேச தேவதேவே
உந்துந் தரங்கமெறி கங்காதரா கயிலை
உறைகின்ற பரதெய்வமே
ஒன்ருகி ஆனந்த வுருவாகி என்னுயிர்க்
குயிரான பரம சிவமே"

என்று, பாடல் நான்கின்மூலம் தென்முகக் கடவுளை விளித்து, பரமாசாரியர்,

"தந்த்ரகலை அறிவனோ? மந்த்ரகலை அறிவனோ?
சாரும் உபதேச கலையில்
கந்த கயிலாச பாரம்பரியமாகவரு
சம்ப்ரதாயம் அறிவனோ?
அந்தாத் துயர்மலைத் தேனினுக்கோர் முடவன்
ஆசை வைத்தது போலவே
ஐயனே நின்னருளை அடைவதற்கு ஆசைவைத்து
அடியன் முகம் வீங்கி நின்றேன்'

என்று உயிர் உள்ள சிறுமையை எடுத்து இயம்புகின்றார். உலக வாழ்க்கை "அந்தரத் துயர்மலை" என்று வருணித்து, அதுஉண்மையில் ஒரு துயர்மலையே என்று சூசிப்பிக்கின்றார் அருளுடை ஆசிரியர். "சிந்தாகுலவில் லொடுசெல்வமெனும் விந்தா டவியென் றுவிடம் பெறுவேனோ?" என்றே அருணைவள்ளலும் உசாவுகிறார்.

தெரிந்தோ தெரியாமலோ அவன் அவனும் தம் வாழ்க்கையைத் தொடங்கும் போது, தன் சரீரத்தை நிழலிலே வைத்து ஆன்மாவை வெயிலிலே போட்டுக் விடுகிறான். தீவினைகளை ஒரு கலையாகப் பயில்கிறான். "பண்ணிய உலகில் பயின்ற பாவத்தை" என்ற ஆளுடைய அரசின் வாக்கை எண்ணிப் பார்த்தல் நலம் பயக்கும். தீய செயல்களே நரகத்திற்கு நேரான மார்க்கம். நரக வாதனையின் வேதனை சொல்லில் அடங்காது. மனம் நெறிப்பட்ட நிலையில், இதன் கொடுமை தெளிவு உறும்.

" சூதினைப் பெருக்கி, களவினைத் துணிந்து
சுரிகுழல் மடந்தையர் திறத்துக்
காதலே மிகுந்து, கண்டவா திரிந்த
தொண்டனேன் நமன் - தமர் செய்யும்
வேதனைக்கு ஒடுங்கி நடுங்கினேன் "

என்று அலறினார் திருமங்கை ஆழ்வார்.

உயிர்களின் துர்நடத்தையைத் திருவருட்பா பாடல் ஐந்து படம் பிடித்துக் காட்டுகிறது கோடான கோடி பொல்லாத பாவங்களை, பொல்லாத வினை, அல்லாரு மலமாயை கருமங்கள் இத்யாதி இத்யாதி என்று பாசம் பயிலப்படும் நிலை நம் தேசிக பரமாசாரியரால் சுட்டப்படுகிறது. விளைவு? நரகந்தான். ஆகவே,

" நல்லார்முன் அணுகாத யமதூதர் கொண்டு போய்
நரகிலே விடுவர் என்று
நடுநடுங்கா நின்றது உள்ளம் "

என்று எடுத்துரைக்கிறார் அருளாசிரியர். பயின்ற பாவத்தை தன்னை தின்று அறுப்பது நமச்சிவாயவே. ஆகவே,

" ... ... உனை நம்பினேன் நம்பினேன் வடகயிலையாய்
உல்லாச பரமகுரு நாதனே ஆலடியில் உறைகின்ற பரதெய்வமே
ஒன்றாகி ஆனந்த உருவாகி என்னுயிர்க்கு உயிரான பரமசிவமே "

என்ற திருந்திய உள்ளத்தோடு உருகி வேண்டலே உய்வுக்கும் உறுதிக்கும் உற்றவழி.

மூவேடனை உபாதையிலிருந்து விலகல் வேண்டும் என்று பாடல் ஆறு அறைகின்றது. இது எளிதான செயல் அன்று. உமாபதி சிவனார் அருளியது போல், "தேடுங்கால் உன்னை ஒழிய உறவில்லை" என்ற திப்பிய ஞானம் ஜனித்தால் அல்லாது, இச் செயல் சாத்தியமாகாது. அருட்டேசிகரும்,

"உரியதுறவுடன் ஞானம் உதவவும் நீரன்றி
ஒரு தெய்வம் வேறில்லையே"

என்று இப்பேருண்மையை ஐயந்திரிபற நமக்கு உணர்த்தியருளுகிறார். "இவரலால் பிராணுர் இல்லையே" என்பது சுந்தர வேதம்.

உலகில் நிலவி வரும் கபடவேடக் கொடுமையை, மணிவாசகர் "நாடகத்தால் உன் அடியார்போல் நடித்து, நான் நடுவேவீடகத்தே புகுந்திடுவான், மிகப் பெரிதும் விரைகின்றேன்" என்று விமர்சனம் செய்து அருளியுள்ளார். முத்தநாதத்தனம் கலியின் ஒரு பெருமடையாளம். இதுவே, கபட வேடத்தால் மெய்வேடத்திற்கு ஊறுவிளைவிப்பது. இக்கொடுமையைப் பாடல் ஏழு எற்றிச் சாடுகிறது.

"பெருங்கபட நாடகம் நடிப்பேற்கும் நின்னருட்
பிரகாசம் ஆகுமோ? சொல்!"

என்றுகூறிப் பிறர் பாவத்திற்கும் அழுவாய் வேண்டுகிறார் பரமாசாரிய சுவாமிகள். தவவேடம் நிலைக்க சரியை, கிரியை, யோகம், உபரதி, பத்தி, ஞானம் ஆகிய அனைத்தும் வேண்டப்படும் என்று காட்டுகிறார் நம் அருள் தேசிகர்.

மனமிருந்தால் மார்க்க முண்டு. உறுதிக்கு உபாயங்கள் உள. விழைவு நிறைவேற வழியுண்டு.

"மோகந் தவிர்த்தவர்கள் மாதரைக் கூடியேமோகந் தணிப்பர்"

என்கிறார் தேசிகசுவாமிகள். "தோய்ந்தே கடந்தான் திருவிற்றெுடர் போகப் பௌவம்" என்பது கம்பர் தரும் காட்சி.

ஆகவே உபாயமிருந்தும் உபயோகம் கொள்ளாத அவலத்திற்கு என் செய்வது?

"ஆனந்த அருள்மழையில் மூழ்க வழிபாராமல் அவமாக நாள்"

கழிக்கலமா? இதுவே பாடல் எட்டுச் சாற்றும் கருத்து.

வழியிருக்க, வழிகாட்ட விழி இருக்க, அறநெறி படராதான் இருந்தும்செத்தவனே. "அந்தோ! விழித்திருந்து உள்ளக்கருத்தினை இழந்தேன்" என்று செத்திலாப் பத்துச் செப்புகின்றது. இதையே திருவருட்பாப் பாடல் எட்டு,

"பாகந் தரித்தவர்கள் சற்குருவின் நோக்கப்
பயோததி படிந்தேபிர
பஞ்ச வெப்பம் தணிப்பார்கள் என்று ஆகமம்
பலகலைகள் சொல்லவும் கேட்டு
ஆகந்தரித்தமல வடவையாற் சூடுண்டு என்
ஐயனே நின் கடைக்கண்
ஆனந்த அருள்மழையின் மூழ்கவழி பாராமல்
அவமாக நாள் கழித்தேன்;
ஊகங் கொடுத்தருளை அடையும்வழி அருளுவாய்
ஒங்கு குருபர நாதனே
ஒன்றாகி ஆனந்த உருவாகி என்உயிர்க்கு
உயிரான பரம சிவமே"

என்று எடுத்து இயம்புகின்றது. நமக்கு நாமே துரோகிகள் ஆகின்ற நித்திய அவல நிலை நீங்க எம்மிறை அருள்பாலித்தல் வேண்டும்.

நரைதலையும் முசியும் மோவாயும், ஒட்டின கதுப்பும், உலர்ந்த உடலும், ஜபிக்கின்ற நாவும், நீர்சொரியும் கண்ணும் அடியார் இலக்கணங்கள் என்று வைணவம் பேசும். "மெய்யன்பு பேர" ஒழியாப் பிரிவில்லா மறவா நினையா அளவிலா மாளா இன்பம் கடல்" ஆகிய இறைவனை எண்ணி எண்ணி அடியார் அழுத வண்ணம் இருப்பர். உருக்கமே அடியார்களின் ஒரே சொத்து. அடியார்கள்,

"உடையாய் அடியேன் உள்ளத்தே ஓவாது உருக அருளாயே"

என்றும்,

"கற்றாவின் மனம் போலக் கசிந்துருக வேண்டுவனே!"

என்றும், கசிந்துருகி, தணிந்த சிந்தையராய் இருப்பர். அழுதுவாட, இறைவன் அருள்புரிவான். தற்போதம் தொலைந்து சிவபோதம் பெறுதலே அவர்களது குறிக்கோள். சிவனார் அருளாலே சிவோகம் பாவனை சாதித்துச் சிவமயமாக அவர்கள் இருப்பர். இப்பெருநிலை வேட்டு நம் ஞான தேசிகர் அருளிய பாடலே ஒன்பதாம் திருப்பாடல்.

" ... ... உப்பினை விழுங்கிடும்
வாரி நீரைப் போலவும்
என்னை நீ உள்விழுங்கிக் கொண்டு இருப்பது இனி
எக்காலம் எக்காலம் என்று
ஏழையேன் அழுது அழுது வாடவும் திருவுள்ளம்
இன்னமும் இரங்கவிலையே"

என்ற வரிகள், ஓதுவாரைத் தூய்மை செய்து உயர் கதியில் உய்க்கும்.

"கொள்ளேன், புரந்தரன் மாலயன் வாழ்வு"

என்றார் மணிவாசகர். அவரைப் போலவே பரமாசாரிய தேசிகரும்,

"அண்டர்தொழும் இந்திராதி வாழ்வையும் விரும்பிடேன்"

என்று தம்முடைய முடிவான பாடலிலே தமது முடிவினை அறிவிக்கின்றார். அட்ட மா சித்திகள், அகில கலை ஞானங்கள், உலகு புகழ் கீர்த்தி - சீர்த்திகள், அன்ன பிற அர்த்தமற்றவை. மலம் ஒருவ அடியார் சேவை புரிதலே உண்மைப் பேறு. சிவஞான போத மணி முடிச் சூத்திரச் செய்தியே முடிவான பத்தாம் பாடலில் பகரப்படுகின்றது.

"பண்டைமலம் எல்லாம் ஒழித்து நின்னருள் பெற்ற
பழைய அடியார்கள் அடியார்
பாததாமரைகள் என்தலையின்மேல் வைத்து அருள்
பார்வையால் இருள் அகற்றித்
தொண்டுசெய்து அரிய பரமானந்த வெள்ளம்
துளைந்து விளையாடி உலகம்
தோன்றுமல் இறுமாந் திருக்கின்ற பெருவாழ்வு
தொண்டனேன் வேண்டினேன் வண்டு
உண்டிடுங் கொன்றையணி அண்டர்நாயக கயிலை
உறைகின்ற பரதெய்வமே
ஒன்றாகி ஆனந்த உருவாகி என்னுயிர்க்கு
உயிரான பரம சிவமே"

என்று பரமாசாரிய சுவாமிகள் அருளித் தம் பதிகத்தைத் தலைக்கட்டுகிறார்.

நாம் வாழ, வாழ்ந்த ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக பரமாசாரிய சுவாமிகள் திருவடிகள் வெல்க!

புரட்டாசி மாதச் சிறப்பு நாட்கள்

17—9—89 ஞாயிறு, ஷடசீதி புண்யகாலம், திருவையாறு மாதப்பிறப்பு [தீர்த்தம்.

18—9—89 திங்கள், சங்கடஹர சதுர்த்தி.

20—9—89 புதன், கிருத்திகை விரதம், வேளூர் கிருத்திகை.

21—9—89 வியாழன், ஸ்ரீ திருநாளைப்போவார் குருபூஜை.

22—9—89 வெள்ளி, மத்யாஷ்டமி, காலாஷ்டமி, மஹாவியதீபாதம்.

26—9—89 செவ்வாய், ஆயில்யவிழா, சன்யஸ்தமஹாளயம், கோவிந்தபுரம், மருதநல்லூர் ஆராதனை விழா.

28—9—89 வியாழன், ஸ்ரீ அருணந்தி சிவாசாரியர் குருபூஜை.

29—9—89 வெள்ளி, சர்வமஹாளய அமாவாசை.

30—9—89 சனி, தருமை ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காதேவிக்கு நவராத்திரி உற்சவ சதசண்டிஹோம பூர்வாங்கங்கள்.

1—10—89 ஞாயிறு, நவராத்திரி பூஜாரம்பம். வேளூர், சீகாழி, திருக்கடவூர், திருவையாறு முதலிய திருத்தலங்களில் பிரதிதினம் ஸ்ரீ அம்பாளுக்கு லட்சார்ச்சனை நடைபெறும் தருமை ஆதீனம் ஸ்ரீமகாலட்சுமி துர்க்காதேவி சந்நிதியில் சதசண்டி யக்ஞாரம்பம்.

3—10—89 செவ்வாய், சதுர்த்தி விரதம், லட்சுமி ஆவாஹனம்.

6—10—89 வெள்ளி, சஷ்டி விரதம். தருமை ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காம்பிகை சதசண்டி யக்ஞ சாலையில், மாலை வில்வ விருக்ஷாபிமந்திரணம்.

8—10—89 ஞாயிறு, காலை ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காம்பிகைக்குச் சதசண்டியக்ஞ சாலையில் அஷ்டாதச ஆயுதமண்டலபூசை, வேளூர் மகிடாசுரசங்காரம். ஸ்ரீ ஏனாதிநாத நாயனார் குருபூஜை.

9—10—89 திங்கள், மஹாநவமி, சரஸ்வதிபூசை, ஆயுதபூசை, சிரவண விரதம். தருமை ஆதீனம் ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காம்பிகை சந்நிதியில் சதசண்டி யக்ஞாரம்பம். மஹாபூரணாஹுதி, சோபன திரவ்ய சமர்ப்பணம். இரவு மண்டலபூசை, சீகாழி, திருக்கடவூர், திருவையாறு முதலிய திருத்தலங்களில் ஸ்ரீ அம்பாளுக்கு லக்ஷார்ச்சனை பூர்த்தி.

10—10—89 செவ்வாய், விஜயதசமி. தருமை ஸ்ரீ மஹாலட்சுமி துர்க்காம்பிகைக்குச் சதசண்டியக்ஞ கலசாபிஷேகம். விசேஷபூசை. வேளூர் ஸ்ரீ தையல்நாயகி அம்பாளுக்கு லக்ஷார்ச்சனை பூர்த்தி. தருமை ஆதீனம் 4 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக சுவாமிகள் குருபூஜை.

11—10—89 புதன், ஸ்ரீ நரசிங்கமுனையரையர் குருபூஜை.

13—10—89 வெள்ளி, ஸ்ரீ நடராஜர் அபிஷேகம்.

14—10—89 சனி, பௌர்ணமி விரதபூசை, அபூபம் சாத்துதல், உமாமகேசுவரவிரதம், தருமை, வேளூர், சீகாழி, கடவூர், திருவையாறு, திருவாரூர் முதலிய தலங்களில் நிறைபணி.

15—10—89 ஞாயிறு, ஸ்ரீ உருத்திரபசுபதி நாயனார் குருபூஜை.

GNANASAMBANDAM

Regd. No. TN / M. M. 1
வெளிநாடு Regd. No. TN / M. M. 4

உ

குருபாதம்

ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலட்சுமி துர்க்காதேவி

39 ஆவது

சதசண்டி வேள்வி நிகழ்ச்சி

30—9—89 முதல் 10—10—89 வரை

ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காதேவி சந்நிதியில் :—

காலை, மாலை சதசண்டி வேள்வி
சுவாசினி, குமாரி, வடு பூஜை
சதுர் வேத பாராயணம்
துர்க்கா சூக்த பாராயணம்
திருமுறைப் பாராயணம்
அபிராமி அந்தாதி பாராயணம்
ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காதேவிக்கு லட்சார்ச்சனை
ஸ்ரீ வித்தியாசக்ரமாகிய மேருவிற்கு
[ஸகஸ்ரநாமார்ச்சனை
விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள்

9—10—89 திங்கட்கிழமை காலை

சப்தசதி ஹோமம்

மகாபூர்ணாகுதி சதசண்டி வேள்வி பூர்த்தி

10—10—89 செவ்வாய்க்கிழமை காலை

ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலட்சுமி துர்க்காதேவிக்கு
யாக கலசாபிஷேகம்

குறிப்பு :- பாராயணம் காலை மாலை இருவேளைகளிலும் நிகழும்.

Printed & Published by V. Ramaiah Pillai Manager, Dharmapuram, at the Gnanasambandam Press, Dharmapuram, Mayiladuthurai 10-9-89.